


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 256

ஞாயிற்றுக்கிழமை
10 ஒகஸ்ட் 2025

ஆடி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

முல்லைத்தீவு - முத்தையன்கட்டுப் பகுதியில்

## இராணுவத்தால் தாக்கப்பட்டவர் குளத்திலிருந்து சடலமாக மீட்பு



**முல்லைத்தீவு, ஒகஸ்ட் 10**

**முல்லைத்தீவு - முத்தையன் கட்டுப் பகுதியில், இராணுவ முகாமுக்குள் அழைக்கப்பட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட நபர், முத்தையன் கட்டுக் குளத்தில் இருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.**

15



இராணுவத்துக்கு எதிரான

## மக்களின் முறைப்பாடுகளை வாக்குமூலமாகப் பதிவுசெய்க

பொலிஸாருக்கு நீதவான் உத்தரவு

முல்லைத்தீவு, ஓக. 10
இராணுவத்தால் தாக்கப்பட்ட குடும்பத்தலைவர் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட விவகாரத்தில், மக்களுடைய முறைப்பாடுகளை வாக்கு மூலமாகப்

15

## முத்தையன்கட்டு விவகாரம்; அரச மட்டத்தில் அவதானம்

ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 10
முல்லைத்தீவு - முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்குச் சென்ற இளைஞர்கள் தாக்கப்பட்டமை தொடர்பிலும், அவர்களில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டமை

15

நீதியின் ஓலம்

## கையெழுத்துப் போராட்டம் ஓகஸ்ட் 23இல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 10
தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி தாயகச் செயலணி அமைப்பின் ஏற்பாட்டில், 'நீதியின் ஓலம்' எனும் தொனிப்பொருளில் கையெழுத்துப் போராட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

15

## இராணுவத்தினர் ஐவர் பொலிஸாரால் கைது!

முல்லைத்தீவு, ஓக. 10
இராணுவத்தால் தாக்கப்பட்ட குடும்பத் தலைவர் முத்தையன்கட்டு குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட விவகாரத்தில், ஐந்து சிப்பாய்கள் சந்தேகநபர்களாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒட்டுசுட்டான் பொலிஸாரால்

15



## சஜித் பிரேமதாஸ ஆளுமையற்றவர்!

கொழும்பு, ஓக. 10
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆளுமையற்றவர். அவர் பதவியில் தொடர்வது அரசாங்கத்துக்கு

15

## ஐ.நா. பொதுச்சபையில் ஜனாதிபதி அநுர உரை

கொழும்பு, ஓக. 10
ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி அநுர உரையாற்றவுள்ளார் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
ஐ.நா. பொதுச்சபையின் 80ஆவது கூட்டத்தொடர்

15



அரசாங்கத்தின் திட்டம் நடைமுறைக்கு வந்தால்

## 500 முன்னாள் எம்.பிக்கள் ஓய்வூதியங்களை இழப்பர்!

**விரிவு பக்கம்:- 15**





பிரசவத்தின்போது உயிரிழந்த

## சிந்துஜாவின் வழக்கில் மூன்று பேருக்கு மறியல்

நீதிமன்றம் நேற்று அதிரடி உத்தரவு

மன்னார், ஓக. 10
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் பிரசவத்தின்போது மருத்துவக் கவனயீனம் காரணமாக, மரியராஜ் சிந்துஜா என்ற இளம் குடும்பப் பெண் கடந்த வருடம் ஜூலை மாதம் உயிரிழந்த நிலையில், இந்த வழக்குடன் தொடர்புடைய மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
மருத்துவக் கவனயீனத்தால்

15

முச்சந்தி முரளி

**'ஆடின காலும் ஆமியின்ர கையும் எப்பவும் சும்மா இருக்காது கண்டியளோ'**

## காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக பொதுமக்களின் போராட்டம் வீரியம்

மன்னார், ஓக. 10
மன்னாரில், இரண்டாம் கட்டமாக காற்றாலைகள் அமைப்பதற்கு எதிராக பஜார் பகுதியில் ஆரம்பமான மக்கள் போராட்டம் நேற்றுப் பெரும் எழுச்சி பெற்றுள்ளது.
பேசாலை, தலைமன்னார் போன்ற பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் நேற்றைய போராட்டத்தில் கலந்து கொண்டனர்.
அவர்கள் தெரிவித்த

15

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | 09.08.2025 | 09.08.2025 | 09.08.2025 | 09.08.2025 | 09.08.2025 | 09.08.2025 | 09.08.2025 | 09.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4158 | 1225 | 0184 | 2264 | 5916 | 1946 | 0491 | 0032 |
| ஆங்கில எழுத்து | V | | G | Z | Y | B | Y | |
| சுப்பர் இலக்கம் | | | | 06 | | | | |
| வெற்றி இலக்கினம் | | மேஷம் | | | | | | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 52 58 63 76 | 4 15 56 62 | 7 4 0 4 | 43 45 76 77 | 4 7 9 1 8 3 | 20 37 65 82 | 9 1 8 3 | 07 09 27 31 |
| விசேட எழுத்து | V | | | | | B | | |

# ஊழல், மோசடிகளில் ஈடுபடும் அனைவர் மீதும் சட்டம் பாயும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, ஓக.10**

**எமது அரசாங்கத்தில் எவரேனும் ஊழல் மோசடியுடன் தொடர்புபட்டிருப்பது உறுதிப் படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் பிரதமரிடமான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி, சீனி மோசடி மற்றும் தேங்காய் எண்ணெய் மோசடி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்த போதும் இதுவரை அதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேநேரம், அரசாங்கம் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதுபோன்று, இந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் உண்மையாக விசாரணை மேற்கொள்ளுமா? கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடிக்குச் சமமாக இந்த அரசாங்கத்தில் உப்பு மோசடி இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று சீனி மோசடிக்குச் சமமாகக் கொள்கலன் விடுவித்த மோசடி இடம்பெற்றுள்ளது. எனவே இந்த மோசடிகள் தொடர்பிலும் அரசாங்கம் முறையான விசாரணை மேற்கொள்ளுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், எமது அரசாங்கம் ஊழல் மோசடிகள் தொடர்பில் உண்மையாகவே விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துவருகிறது. அரசாங்கத்துக்குக் கௌரவத்தை அதிகரித்துக்கொள்வதற்காக விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை - என்றார். (எ-இ)

### சுபிரி தன சம்பத

திகதி: 09.08.2025
தினம்: சனிக்கிழமை
வெற்றி வாரம்: 0624
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கம்: 8 8 5 1 4 3

### Super Ball

திகதி: 09.08.2025
தினம்: சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2890
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கம்: 02 22 34 63

### சனிதா

திகதி: 09.08.2025
தினம்: சனிக்கிழமை
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கம்: 01 22 57 72
வெற்றி வாரம்: 5051

### SASIRI

திகதி: 09.08.2025
தினம்: சனிக்கிழமை
வெற்றி வாரம்: 0744
வெற்றி இலக்கம்: 13 16 24

### லக்ன ராசி

திகதி: 09.08.2025
தினம்: சனிக்கிழமை
மிதுனம்
வெற்றி இலக்கம்: 20 44 46 62
சீட்டிழுப்பு வாரம்: 4602

### KAPRUKA

திகதி: 09.08.2025
தினம்: சனிக்கிழமை
ஆங்கில எழுத்து: F
சுப்பர் இலக்கம்: 02
வெற்றி இலக்கம்: 30 49 61 66
வெற்றி வாரம்: 2060

### அத கோடிபதி

திகதி: 09.08.2025
தினம்: சனிக்கிழமை
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கம்: 21 32 46 70
வெற்றி வாரம்: 2716

# வரிக் குறைப்புச் செய்ய செய்த ஒப்பந்தம் என்ன?

## கேள்வி எழுப்புகின்றார் அஜித் மனப்பெரும

கொழும்பு, ஓக.10

இலங்கை மீதான ஏற்றுமதி வரியை 20 வீதமாக குறைப்பதற்கு இலங்கை அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அம்பலப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அஜித் மனப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்கா எம்மீது ஆரம்பத்தில் 45 வீத ஏற்றுமதி வரியை விதித்தது. பின்னர் 30ஆகக் குறைத்தது. மீண்டும் 20 வீதமாகக் குறைத்துள்ளது.

இலங்கையர் என்ற அடிப்படையில் நாம் மகிழ்ச்சியடையவேண்டிய விடயம். ஆனால் இந்த வரிக் குறைப்பு தானாக நிகழ்ந்ததா? அல்லது அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதா? என்பதை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும்.

அமெரிக்காவில் இருந்து எரிபொருள் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற அமெரிக்காவின் நிபந்தனைக்கு இலங்கை அரசு உடன்பட்டதாலேயே இந்த வரிக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவ்வாறானால் அந்த ஒப்பந்தத்தை வெளியிடவேண்டும். இந்தியாவோடு செய்துகொண்ட ஒப்பந்தம்கூட இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

அமெரிக்காவில் இருந்து எரிபொருள் இறக்குமதி செய்யவேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருந்தால் அது பாரதூரமானது. அது விலை கூடியதாக இருக்கும். அதற்கான போக்குவரத்துச் செலவு அதிகம். அதனால் அரசாங்கம் உண்மையை வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (எ-75)

# குஷ் போதைப்பொருளுடன் இருவர் கைது



கொழும்பு, ஓக.10

ஒரு பில்லியன் ரூபா மதிப்புள்ள குஷ் போதைப் பொருளுடன் இரண்டு நபர்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 5 கிலோ 154 கிராம் குஷ் போதைப்பொருள்,கையடக்கத் தொலைபேசி மற்றும் ஒரு இலட்சம் ரூபா ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)

# யானைகளின் நடமாட்டத்தை கண்டறிய செயலி அறிமுகம்

கொழும்பு, ஓக.10

மனித - யானை மோதலைக் குறைப்பதையும், இதனால் ஏற்படும் உயிர் மற்றும் உடைமை இழப்புகளைக் குறைப்பதையும் நோக்கமாகக்கொண்டு யானைகளின் நடமாட்டத்தை நிகழ் நேரத்தில் அறிவிக்கும் கைபேசிச் செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

செயலியின் உருவாக்குநர்களில் ஒருவரான வினுர அபேரத்ன தெரிவிக்கையில்,

யானைகள் அருகில் வரும்போது மக்களுக்கு எச்சரிக்கை செய்வதன்மூலம் சேதங்கள் மற்றும் மனித உயிரிழப்புகளைக் குறைப்பதே இந்தச் செயலியின் நோக்கம். இலங்கையில் சுமார் 3 ஆயிரம் பேர் இந்தச் செயலியைப் பயன்படுத்திவருகின்றனர். இந்தச் செயலியின்படி, ஒரு குறிப்பிட்ட பகுதியில் யானை நடமாட்டம் தென்பட்டால், பயநர்கள் அதனைச் செயலி மூலம் அறிவிக்கமுடியும். உடனடியாக, அந்த இடத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் சுற்றளவில் உள்ள ஏனைய பயநர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டு, அவர்கள் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருக்குமாறு அறிவுறுத்தப்படுவார்கள் - என்றார். (ச-இ)

# இலங்கைக்கு ஆஸி. ஒத்துழைப்பு வழங்கும்

கொழும்பு, ஓக.10

இலங்கையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு அவுஸ்திரேலியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு வருகைதந்துள்ள அவர் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை அலரிமாளிகையில் நேற்றுமுன் தினம் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இலங்கையின் புதிய கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் ஆளுநர் நாயகத்துக்குப் பிரதமர் விளக்கமளித்தார்.

அவுஸ்திரேலியாவின் கல்வி முறைமை குறித்து ஆளுநர் நாயகம் பிரதமருக்குத் தெளிவுபடுத்தியதுடன், இத்துறையில் மிக நெருக்கமாக இணைந்து செயற்படுவதற்கான தமது ஆர்வத்தினையும் வெளிப்படுத்தினார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வண்ணமயில் வாகனத்தில் நல்லூர்க் கந்தன் உலா

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட பெருந்திருவிழாவின் பதினொராவது நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது நல்லூர்க் கந்தவேற்பெருமான் வண்ண மயில் வாகனத்தில் வள்ளிதெய்வயானையருடன் உள்வீதி, வெளி வீதி உலா வந்தார். (ச-66)

# ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.10

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவ குரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு "நீ தான் சற்றும் நினைந்திலையே" எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (ச-41-66)

நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் ஆலய தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பல நூற்றுக் கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-41-66)





# தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக.10

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 13ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறவுள்ளது. வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, யாழ்.பல்கலைக்கழகச் சமஸ்கிருதத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் நவநீதகிருஷ்ணின் தலைமையில் இந்தத் திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கலைநிகழ்வுகளை காரைநகர்ப் பிரதேச செயலகப் பிரிவின் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் அறநெறிப்பாடசாலை, பாலாவோடை, ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை, திக்கரை இந்து அறநெறிப்பாடசாலை, கல்வந்தாழ்வு ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை மற்றும் பிட்டியெல்லை கலியங்கண்டி கண்ணகையம்மன் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வுகளாக ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் குமாரசாமி சண்முகநாதனின் "ஈழ நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வரலாற்று உண்மையும் ஞானப்பொருள் விளக்கமும்" என்ற நூல் வெளியீடும், யாழ்ப்பாணம் கீதவாகினி இசைக்கல்லூரி மாணவி ருக்ஸாஜினி குருபரனின் இசைக்கச்சேரி நிகழ்வும், கொழும்பு தேஜஸ்வராலயாக் கலைக்கூட இளம் இசைச்சுடர் தேஜஸ்வினி பிரணவனின் திருப்புகழ் சமர்ப்பண நிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (ச-41)

# தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.10

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது இணுவில் தமிழ்ச்சங்க பஜனைக்குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)

# 13 ஆம் திருவிழா




## இளையவனே விடைபகர்வாய்

தேடிவரும் அடியவர்கள் முகம் பார்ப்பாயோ அன்றேல்
தேம்பியழவைத்துவிட்டு நகைபூப்பாயா?
ஓடிவரும் உள்ளத்தார் துயர்களைவாயோ அன்றேல்
ஒய்யாரமாய் மயில்மேலேறி உலாவருவாயா?
பாடிவரும் பாமரர்கள் பசி தீர்ப்பாயோ அன்றேல்
பார்த்திருக்க பஞ்சணையில் பள்ளிகொள்வாயா?
மூடிவரும் இருளகற்ற முன்வருவாயோ முருகா
முழுமுதலின் இளையவனே விடைபகர்வாயே.

**கலாபூசணம் நடராசா இராமநாதன்**

## வண்ண வடிவேலனே

பாலோடு உணவு புசிக்க வேண்டிலோம்
மாடிமனைதனில் வசிக்க வேண்டிலோம்
அறுபடை வீடுடைய அலங்காரக்கந்தனே
நாம் உனை வேண்டுவதெல்லாம்
அல்லல் படாமல் அமைதியாய் இருந்து
நின் மலர்பாதங்கள் தொழுது வணங்கி
வாழ்ந்திட வரம் தருவாயென வேண்டுகிறோம்
வண்ண வடிவேலனே நல்லைக் குமரேசனே

**சி.மகாலட்சுமி**
கொக்குவில்

வேல் கொண்டுவந்து
துயர் வேரறுப்பவனே
நாள் பல ஆகுதைய்யா
செம்மணிபால் சிசுவிற்கும் தீங்கிழைத்தவர்
கதைமுடிக்க சேனாதிபதியாய் வாருமைய்யா

**கவிக்கிறுக்கன், இணுவில்**

## குமரனுக்கு அரோகரா

அலங்காரக் கந்தனுக்கு அரோகரா
ஆறுமுக சுவாமிக்கு அரோகரா
குலங் காக்கும் குமரனுக்கு அரோகரா
குஞ்சரியர் நாதனுக்கு அரோகரா
நலங்காக்கும் வேலனுக்கு அரோகரா
நல்லைநகர் கந்தனுக்கு அரோகரா
நிலம் காக்கும் அலங்காரனுக்கு அரோகரா
நிரந்தர தீர்வைத் தரப்போகிறவனுக்கு அரோகரா

**காரை மதுரகவி**

கொஞ்சு தமிழ் இசை ஒலிக்க
கோலாகலம் காட்டி
குஞ்சரியாரிருவரிணை
கோனென வேலேந்தி
அஞ்சும் நிலையகற்றி
ஆறுதலை எமக்கருளும்
மஞ்சத் தேரேறிவரும்
மயில் வாகனன் நல்லூரான்

**தேவி.கணேஸ்**
**ஆனைப்பந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களிடையே உயரும் குற்றச்செயல்கள்

## நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும்பாதிப்பு பொலிஸ்துறை தெரிவிப்பு

கொழும்பு, ஓக.10

**இதுவரை குற்றச்செயல்களில் ஈடுபடாத இளைஞர்கள்கூட குற்றங்களில் ஈடுபடும் போக்கு தற்போது அதிகரித்துவருகின்றது என்று இலங்கை பொலிஸ் பயிற்சிக்கல்லூரியின் வெளிவிரிவுரையாளரும் குற்றவியல் நிபுணருமான டி.எம்.எஸ். தம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் துப்பாக்கிச் சூடு மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வுகள் இந்தப் போக்கை உறுதிப்படுத்தியுள்ளன. ஒவ்வொரு மாதமும் சுமார் 40 இளைஞர்கள் புதிதாகக் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். கடந்த சில மாதங்களில் 40-50 புதிய குற்றவாளிகள் உருவாகும் நிலை பதிவாகியுள்ளது. இவர்களில் பெரும்பாலோர் இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். நாட்டில் நிகழும் குற்றங்களை சர்வதேச மட்டத்துடன் ஒப்பிடும் போது, அவை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றன. இது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சமூக வளர்ச்சிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இலங்கை பொருளாதார ரீதியாக நிலையற்ற நிலையிலிருந்து மீண்டுவரும் இந்தச் சூழலில், குற்றச்செயல்களின் அதிகரிப்பு நாட்டுக்கு மிகப்பெரிய பாதகமாக அமையும்- என்றார். (ச-இ)



## நல்லூர்த் திருவிழாவில் புதிய கட்டிய விமானம்!

யாழ்ப்பாணம், ஓக.10

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் வருடாந்தம் இடம்பெறும் பெருந் திருவிழாக் காலப் பகுதியில் இணைக்கப்படும் புதிய அம்சங்களில் நல்லூரானுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட கட்டிய விமானம் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

திருவிழாவின் 11ஆவது நாள் மாலை உற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோதே நல்லூர்க் கந்தன் இந்தப் புதிய கட்டிய விமானத்தில் எழுந்தருளினார்.

ஆலயத்தின் பெருவீதியில் நல்லூர்க் கந்தப்பெருமான் வீதி உலாவாக வருவதற்கு முன்னர் ஆலய முன் வாயிலுக்கு எழுந்தருளும்போது மேற்படி விமானத்தில் ஏறிநின்று ஆலயப் பிரதமகுரு கட்டியம் கூறி நல்லூரான் வரவை அறிவிக்க குறித்த கட்டிய விமானம் பயன்படுத்தப்படவுள்ளது. (ச-66)

## பீடி இலையுடன் ஒருவர் கைது


கொழும்பு, ஓக.10

மினுவாங்கொடப் பகுதியில் பீடி இலைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 23 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவற்றின் பெறுமதி 2.4 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ).

## அச்சுவேலி அந்தோனியாரில் உண்டியல் உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.10



அச்சுவேலி அந்தோனியார் ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது என்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது அங்குள்ள சி.சி.ரி.வி. கமராவில் இளைஞர் ஒருவர் ஆலயத்தின் கதவைத் திறந்து உள்ளே சென்று அங்கிருந்த பண உண்டியலை உடைத்துப் பணத்தை எடுத்துச்செல்கின்றமை பதிவாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-23)

## விளையாட்டுக் கட்டடத்தொகுதியை முல்லைத்தீவில் அமையுங்கள்

### ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.10

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுவிளையாட்டுக் கட்டடத்தொகுதியை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்ரவிகரன் இந்தக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது மாவட்டங்கள்தோறும் இளைஞர்கழக சம்மேளனங்களைத் தெரிவுசெய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அந்தவகையில் எமது முல்லைத்தீவு மாவட்டத்திலும் இளைஞர்கழக சம்மேளனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட பொதுவிளையாட்டுக் கட்டடத்தொகுதி முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்படவில்லை. எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுத்துறை சார்ந்து காணப்படுகின்ற குறைபாடுகள் தீர்த்துவைக்கப்படவேண்டும் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுவிளையாட்டுக் கட்டடத்தொகுதியை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-26,246)

## உலக வங்கியின் திட்டங்கள் வடக்கு ஆளுநர் ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஓக.10

உலக வங்கியின் உதவியுடன் வடக்கில் முன்னெடுப்பதற்கு அடையாளம் காணப்பட்ட திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் உள்ளடக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

உலக வங்கியால் முதற்கட்டத்தில் தேர்வுசெய்யப்பட்டுள்ள திட்டங்கள், அதன் தயார் நிலைமை என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் புதிதாக எத்தகைய திட்டங்களை உள்ளடக்கவேண்டும் என்பது தொடர்பிலும், அதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் சில திட்டங்களுடன் தொடர்புடைய திணைக்களங்களுடன் ஆராய்ந்து அதன் முடிவுகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.


இந்தக் கலந்துரையாடலில், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் இணைப்பாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள், வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர், திட்டமிடல், உதவிப் பணிப்பாளர்கள், நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் ஆகியோர் பங்கேற்றனர். (ச-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 • 09 • 1942



மறைவு 09 • 08 • 2025

## அமரர் சபாரத்தினம் பாலாபரணம்

கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பாலாபரணம் (09.08.2025) சனிக்கிழமை காலமடைந்து விட்டார்.

அன்னார் சுகுணசரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சபாரத்தினம் (ஓசியர்) - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (காட்டர்) - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ் சென்றவர்களான மதியாபரணம், பரமேஸ்வரி, சுந்தரேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், நித்தியா, நிரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரகுராஜின் மாமனாரும், காலஞ்சென்ற ரவிதாசன் மற்றும் உமாதேவி, கமலேஸ்வரி, விமலேஸ்வரி, கண்ணதாசன், மோகன்தாஸ் ஆகியோரின் மைத்துனரும், சிவபரன் (அவுஸ்ரேலியா), ரகுபரன் (டென்மார்க்), ஜெயபரன் (அவுஸ்ரேலியா), யசோதை (லண்டன்), சத்தியபரன் (லண்டன்), உமாவிக்கினராஜ் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் மாமனாரும், பிரவீனயா, பவனுஜா, ஹரீந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (10.09.2025) பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**25, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்**

**தகவல் : குடும்பத்தினர்
021 222 3485
076 431 6362**

(CS 59059) E

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 • 03 • 1947



மறைவு 07 • 08 • 2025

## கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன் 07.08.2025 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா சின்னாச்சியின் மருமகனும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், பிரதீபா, பிரசாந்தினி (ஒஸ்ரியா), தவசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், கோகதீஸ்வரன் (ஒஸ்ரியா), சுஜேனி ஆகியோரின் மாமனாரும், இராசையா, அரியமலர், செல்வமலர், காலஞ்சென்ற சிவம் மற்றும் சரஸ்வதி, செல்வதி, திருவருள் (ஜேர்மன்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பரமேஸ்வரி, புஸ்பமலர், கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனரும், கவிதரன், கோபிஷன், ஆகாஷ் (ஒஸ்ரியா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (10.08.2025) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மாரி அம்மன் வீதி
கோப்பாய் மேற்கு,
கோப்பாய்**

**தகவல்:
குடும்பத்தினர்
077 211 3419**

(CS 3003) E

## மன்னார் மக்களுக்கு ஆதரவாக யாழில் போர்

யாழ்., ஓக. 10

கற்றாலைத் திட்டத்துக்கு எதிராகவும், இல்மனைட் அகழ்வுக்கு எதிராகவும் மன்னாரில் இடம்பெறும் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம், பண்ணைக் கடற்கரையில் இன்று மாலை 3 மணியளவில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

போராட்டத்தின் ஒரு கட்டமாக இயற்கை வளச் சுரண்டலுக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறுவர்களின் சித்திரம் வரைதல் நிகழ்வும் இடம்பெறும். இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்வதுடன் சித்திரம் வரைதலில் ஆர்வமுள்ள சிறுவர்களையும் அழைத்து வருமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம–66)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 • 02 • 1960



மறைவு 11 • 07 • 2025

**கடந்த 11.07.2025 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி**

## செல்வி கந்தையா கலாவதி

**(ஓய்வுபெற்ற விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர் இணுவில் இந்துக் கல்லூரி)**

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
அகலவில்லை எங்கள் துயரம் தாயே!
மனம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய் அனைவருடனும்
கலகலப்பாகப்பேசி மகிழ்விக்கும்
உங்கள் சிரித்தமுகம் கண்களில் தொடர்ச்சியாகத்
தோன்றிய வண்ணம் இருக்கின்றது
இவ்வளவு விரைவாக எங்களை - விட்டுப்பிரிவீர்கள் என்று
கணப்பொழுதுகூட நாங்கள் நினைக்கவில்லை

**உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

**குடும்பத்தினர்**

(CS/59064) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 • 03 • 1957



மறைவு 07 • 08 • 2025

## வேலாயுதபிள்ளை சூரியகுமாரன்

கொக்குவில் கிழக்கு, கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சூரியகுமாரன் (07.08.2025) வியாழக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சிறிரதி, சிறிகுமாரன், சிறிகௌரி, சிறிபாலன், சிறிவாணி, சிறிலலிதா, தேவகி, ஜெகதீஸ்வரன், காலஞ்சென்றவர்களான சிறிமதி, ஸ்ரீகாந்தன், சிறிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும், ரேணுகா, ரேணுகாந்தன், திருச்செந்துரநாதன், நிர்மலன், சகிதா, காலஞ்சென்றவர்களான குணரத்தினம், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், அருநூத்தன், அமலி, நிவேதா, ஜெனார்த்தனன், கோணேஸ்வரநாதன், கேதீஸ்வரநாதன், ஜெகதீஸ்வரநாதன், சகான, சாயிட்சிம்மை ஆகியோரின் மாமனாரும், நரேந்திரன், பானுஷா, யனூஷா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (10.08.2025) முற்பகல் 11.00 மணியளவில் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :
குடும்பத்தினர்**

(CS 59066) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளநேரிடலாம்.

**இடபம்:** அதிகாரிகளின் சந்திப்பும், அவர்களால் காரிய அனுகூலமும் உண்டாகும். தாயிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் ஆலோசனை கேட்டுவருவார்கள்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர் களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். பிற்பகலுக்குமேல் சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்ட நாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியப் பிரமுகர் பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியங் கள் அனுகூலமாகமுடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.சகோதரர்கள் அனுசரணை யாக நடந்துகொள்வார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பிற்பகலுக்குமேல் மற்றவர் களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**விருச்சிகம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளை யோசித்து எடுப்பது நல்லது. கடன்கள் விஷயத்தில் சற்று எச்சரிக்கை யாக இருக்கவும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். இளைய சகோதரவகையில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** வழக்கமான பணிகளில் மட்டும் ஈடுபடவும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய வேண்டியிருக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மனதுக்கு உற்சாகம் தரும்.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளில் ஈடு படாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினை ஏற்படக்கூடும்.





## இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி 135ஆவது ஆண்டு நடைபவனி

வவுனியா, ஓக.10

வவுனியாவின் முன்னணி தேசிய பாடசாலையான இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியின் 135 ஆவது ஆண்டினை கொண் டாடும் முகமாக நடைபவனி நேற்று நடைபெற்றது.

பாடசாலையின் முன்பாக ஆரம்பித்த நடைபவனி இரண்டாம் குறுக்குத்தெரு ஊடாக கண்டி வீதியை அடைந்து அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை அடைந்து பசார் வீதி ஊடாகச் சென்று ஹொரவப்பொத்தானை வீதி ஊடாக பாடசாலை முன் றலைச் சென்றடைந்தது. (ச-110)





## வவு. தமிழ் மத்திய மகா வித்தியில் பழைய மாணவர்களால் உதவிகள்

வவுனியா, ஓக.8

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டை நோக்கிய பயணத்தின் ஒரு கட்ட மாக 2000ஆம் ஆண்டு சாதாரண தரம் மற் றும் 2003 ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற பழைய மாணவர்களினால் 3 இலட்சத்து 23 ஆயிரத்து 800 ரூபா நிதியில் 30 வளவாளர் கதிரைகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

அதேவேளை குறித்த பாடசாலையின் பழைய மாண வரான செரோனால் பாடசாலையின் மதில் சுவருக் கான நிறப்பூச்சு செய்துகொடுக்கப்பட்டதுடன், மதில் சுவரிலே "சுத்தமான பாடசாலையைப் பேணுவோம்" எனும் உயரிய நோக்கில் பாடசாலை மாணவர்களி னால் ஓவியம் வரையும் செயற்பாடும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-25,110)



அளவெட்டி தெற்கு வயல்வெளி முத்துமாரி யம்மன் ஆலய வருடாந்தத் தேர் உற்சவம் பக்தர்கள் புடை சூழ நேற்றுமுன்தினம் வெள் ளிக்கிழமை இடம்பெற்றது. புதிதாக செய்யப் பட்ட சித்திரத் தேரில் முருகனும், விநாயகரும் வீதி உலா வந்தனர். (ச-41-63)

## இணுவில் ஆஞ்சநேயர் கும்பாபிஷேகம்



யாழ்ப்பாணம், ஓக.10

இணுவில் - மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்ச நேயர் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா எதிர் வரும் 28 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7.35 மணி முதல் 9.18 மணிவரையுள்ள சுப முகூர்த்தவேளை யில் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

அதனையொட்டி எதிர்வரும் 20ஆம் திகதி புதன் கிழமை காலை 9.05 -10.05 மணிவரையுள்ள சுபவேளையில் கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிமுதல் 27ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சாவ. மத்தியஸ்தர் சபை அமர்வுத் திகதி மாற்றம்

சாவகச்சேரி ஓக.10

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த சாவகச் சேரி மத்தியஸ்தர் சபை அமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என சபையின் தவிசாளர் வே. செல்வகுமார் அறிவித்துள்ளார். இன்று கல்லூரியில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள தால் அமர்வுத் திகதி மாற்றப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார் . (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

ஒருவருடைய சொற்கள் உங்களை வருத்தமடையச்செய்ய நீங்கள் அனுமதிக்கும்போது, நீங்கள் உங்களது ஆற்றலை இழக்கிறீர்கள்.

– மைக்கேல் ஜோர்டன்–


## புதிய மட்டைகள் ஆனால் பழைய குட்டை!

அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பில் எந்த உத்தரவாதமும் வழங்கமுடியாது என்று நாடாளு மன்றத்தில் வைத்துத் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார. அரசியற்கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்படுவது முழுக்க முழுக்க ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம் என்றும் அமைச்சர் மன்றுரைத்திருக்கின்றார். அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தொழில்துறை அமைச்சரோ, கடற்றொழில் அமைச்சரோ அல்லது போக்குவரத்து அமைச்சரோ அல்லர். அவர் நீதியமைச்சர் - அரசியற்கைதிகளின் விவகாரத்தில் 'துறைசார் நெருக்கம் கொண்ட' அமைச்சுக்கு அவரே பொறுப்பானவர். ஆதலால், அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்துகளை 'அரசதரப்பின் வலுவான வாக்குமூலமாகவும்' கொள்ளமுடியும்.

கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம் என்பது அரசியலமைப்புத் தொடர்பில் குறைந்தபட்ச புரிதல் உள்ள எவருக்கும் தெரியும். ஆனால், ஜனாதிபதி கைதிகளைப் பொதுமன்னிப்பில் விடுவிப்பாரா, இல்லையா என்பது அமைச்சருக்குத் தெரியவில்லை என்றால், தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரவையில் ஆழமான பிணைப்பு இல்லை என்றே அர்த்தம். அரசியற்கைதிகளை விடுவிப்பது என்பது சாதாரணமான விடயமல்ல. இதுவொரு பெரும் நகர்வு. எனவே, அந்த விடயத்தில் ஜனாதிபதியின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை அமைச்சரால் வெளிப்படுத்தமுடியவில்லையென்றால், கடந்த அரசாங்கங்களைப் போன்று தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அரசியல் சதிராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றது என்றே பொருள்.

அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவை சில தினங்களுக்கு முன்னர்தான், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அவரது அமைச்சில் வைத்துச் சந்தித்திருந்தனர். இதன்போது, 'அரசியற்கைதிகளின் பிரச்சினையை, காதுகளால் அல்ல, இதயத்தால் கேட்கின்றேன்' என்று அவர் கூறியிருந்தார். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடத்தில் கூறிய அந்தக் கருத்துக்கும், சிங்கள ஊடகங்கள் மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துகளுக்கும் இடையிலான ஒப்பீடு மலைக்கும், மடுவுக்கும் இடையிலான வேறுபாடே. மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டும் இத்தகைய விலாங்கு மீன் விளையாட்டைத் தேசிய மக்கள் சக்தியினர் கைவிட வேண்டும்.

இராணுவ முகாம்களை நீக்குவதில் உள்ள இழுத்தடிப்பு, காணி விடுவிப்பில் உள்ள கள்ள மௌனம், அரசியற்கைதிகளின் விடுதலையில் உள்ள பாராமுகம், காணாமற்போனோர் விடயத்தில் உள்ள கபடத்தனம், திஸ்ஸ விகாரையின் விடயத்தில் வெளிப்படுத்தப்படும் நுண்ணிய அரசியல் என அனைத்திலும், கடந்த அரசாங்கங்களின் பாதையில்தான் தற்போதைய அரசாங்கம் பயணித்துக்கொண்டிருக்கின்றது. 'மாற்று முகங்கள்' ஆட்சிக்கு வந்ததால் ஏற்பட்ட கவனக் குவிவும், வந்த வேகத்தில் நடைமுறைப்படுத்திய ஓரிரு பாதை விடுவிப்புகளும் தேசிய மக்கள் சக்தியினருக்கு வெண்சாயம் பூசியிருக்கின்றதே அன்றி, இவர்கள் ஒன்றும் மீட்பின் தூதுவர்கள் அல்லர். உண்மையிலேயே முறைமை மாற்றத்தை இந்த அரசாங்கம் விரும்புகின்றது என்றால், புதியதொரு அரசியல் கலாசாரத்தை புகுத்துவதற்கு எத்தனிக்கின்றது என்றால் தமது மாற்றத்தை அரசியற்கைதிகளின் விடயத்திலும், காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்திலும் காட்டட்டும்.




## சைபர் தாக்குதலுக்கு இலங்கை சிக்கலாம்



### சர்வதேச சைபர் பாதுகாப்பு நிறுவனம் எச்சரிக்கை

**கொழும்பு, ஓக.10**

**இலங்கை மீது மிகப்பெரிய சைபர் தாக்குதல் நடத்தப்படக்கூடிய அபாயம் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

உலகின் முதனிலை சைபர் பாதுகாப்பு நிறுவனமான கெஸ்பர்ஸ்கி நிறுவனத்தினால் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் மிக ஆக்ரோஷமான அச்சுறுத்தல் நிலவும் நாடுகளில் ஒன்றாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சைட்வைண்டர் என்ற சைபர் தாக்குதல் குழுவின் அச்சுறுத்தல் நிலவுவதாகவும், இதில் இலங்கையைப் பிரதான இலக்குகளில் ஒன்றாக அடையாளப்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச இரகசியங்கள் உள்ளிட்ட முக்கியமான தகவல்களை இலக்கு வைத்து இந்தக் குழுக்கள் சைபர் தாக்குதல் நடத்துவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சைபர் தாக்குதல்கள் தகவல்களைத் திரட்டும் நோக்கிலானது அல்ல எனவும் புவிசார் அரசியல் காரணிகளையும் அரச இரகசியங்களைக் கைப்பற்றும் நோக்கிலும் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

கொழும்பு, ஓக.10

கடுவெல, கொத்தலாவல - கெக்கிலிவெல சாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபரை கைது செய்ய முயன்றபோது அவர் வாளால் பொலிஸாரைத் தாக்க முயன்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

## பிரிட்டனின் ஏ.ஐ. எம்.பி.

பரிஸ், ஓக.10

முதல்முறையாக பிரித்தானியாவில் செயற்கை நுண்ணறிவு நாடாளுமன்ற உறுப்பினர் உருவாக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவின் லீட்ஸ் சவுத் வெஸ்ட் மற்றும் மோர்லி தொகுதியின் லேபர் கட்சி எம்.பி. மார்க் சீவார்ட்ஸ் தன்னைப் போலவே ஒரு ஏ.ஐ. பதிப்பை உருவாக்கியுள்ளார்.

இதுவே பிரித்தானியாவின் முதல் மெய்நிகர் பதிப்பு என அழைக்கப்படுகிறது. (ச-இ)

## தீயில் சிக்குண்டு சிறுவன் சாவு

கொழும்பு, ஓக.10

பலாங்கொட, தெஹிகஸ்தலாவை, மஹவத்தப் பகுதியிலுள்ள வீடொன்றில் அதிகாலை ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தில் ஏழு வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடு தீப்பிடித்ததில் பாதிப்புக்குள்ளான சிறுவனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டநிலையில் சிறுவன் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளான். (ச-இ)



## குளவி கொட்டி தொழிலாளி சாவு

கொழும்பு, ஓக.10

தோட்டத் தொழிலாளி ஒருவர் குளவித் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். இவர் தனது வீட்டுக்குக் குடிதண்ணீர் வழங்கும் உடைந்த குழாயை சரிசெய்யச் சென்றபோதே குளவித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



நாளை

திங்கட்கிழமை - ஆடி 26

11.08.2025

சுபநேரம் : 12.04 - 01.34

ராகுகாலம் : 07.34 - 09.04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

1. யோகராசா கைம்பெண் தங்கம்மா
   மீசாலை வடக்கு.
   மீசாலை.
   இவரின் அற்றோனித்தத்துவகாரரான
   யோகராசா தயாபரன்
   மீசாலை வடக்கு.
   மீசாலை.
2. யோகராசா தயாபரன்
   மீசாலை வடக்கு.
   மீசாலை.

-வழக்காளிகள்-

வழக்கு இல: காணி/ 600 /2025 எதிர்

1. ஜெயரத்தினம் வசீகரன்.
2. பெண் தவயோகேஸ்வரி.
   இருவரும்.
   மீசாலை வடக்கு.
   சாவகச்சேரி.
3. நடேசன் கிரிதரன்
   ஊறெல்லைத் தெரு.
   மீசாலை மேற்கு.
   மீசாலை.

-எதிராளிகள் -

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு.

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக காணி வழக்குத் தொடர்ந்துள்ளதினால் இதனோடிணைக் கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2025ஆம் ஆண்டு 08ம் 25ந் நாளன்று. அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும் படி இத்தால் நீவிர் தேவைப் படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர்மறு மொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் மேலும் தேவைப் படுத்தப்படுகின்றீர்

பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பதிவாளர்

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைளைக் கொடுக்குமாறும், 80ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்

2025ம் ஆண்டு 08ம் மாதம் 04 ம் நாளாகிய இன்று.

கையொப்பம், பதிவாளர்

(CS 3791)A

Summons

No.16 Section 55 (1)

## District court of Chavakachcheri

1. Thangamma Widow of Yogarajah
   Meesalai North,
   Meesalai.
   By her Power of Attorney Holder
   Yogarajah Thayaparan
   Meesalai North,
   Meesalai
2. Yogarajah Thayaparan
   Meesalai North,
   Meesalai

-Plaintiffs-

Case No: Land/600/2025

Vs

1. Jeyarathinam Vaseekaran
2. Wife Thavayogeshwary
   Both
   Meesalai North,
   Meesalai.
3. Nadeshan Kireeshan
   Meesalai North,
   Meesalai.

-Defendents-

To the above-named defendants

Whereas the above-named plaintiff has instituted an action against you in this court for (state particulars of claim), you are hereby required to file in your answer if any, to the plaint herewith annexed on or before the 25th day of August 2025 and you are hereby required to take notice that in default of your filing answer on or before the said date the action will be proceeded with and heard ex parte.

You are further required, if you do not appear by a registered attorney, to file a memorandum stating an address at which all legal notices may be served.

By Order of Court,

Registrar

Note.- If you desire to receive notice of the date on which the above action will be called in open court, in order to fix the date of trial, you are required by Section 80 to furnish to the Registrar of this Court a registered address and tender stamps to the requisite value to cover postage by registered post.; This 04 day of August 2025.

Signature, Registrar

(CS 3791 E)A

සිතාසිය

අංක16, 55(1) වන වගන්තිය

## චාවකච්චේරිය දිසා අධිකරණය.

1. යෝගරාසා වැන්දඹුව තංගම්මා
   මීසාලේ උතුර,
   මීසාලේ,
   ඇයගේ ඇටෝනි බලකරු වන
   යෝගරාසා දයාපරන්,
   මීසාලේ උතුර.
   මීසාලේ
2. යෝගරාසා දයාපරන්,
   මීසාලේ උතුර. මීසාලේ

-පැමිණිලිකරුවන්

එදිරිව

නඩු අංකය - ඉඩම්/ 600 /2025

1. ජෙයරත්නම් වසීකරන්,
2. බිරිඳ තවයෝගේස්වරි,
   දෙදෙනාම
   මීසාලේ උතුර,චාවකච්චේරිය,
3. නඩේසන් ගිරිදරන්,
   ඌරෙල්ලෙයි වීදිය,
   මීසාලේ බටහිර, මීසාලේ.

-විත්තිකරුවන්.

ඉහත නම් සඳහන් විත්තිකරුවන්ටයි.

ඔබට විරුද්ධව මෙම අධිකරණයේ ඉඩම් නඩුවක් පවරා ඇති බැවින් මීට අමුණා ඇති පැමිණිල්ලට ඔබගේ යම් උත්තරයක් ඇත්නම් එය වර්ෂ 2025 ක් වූ අගෝස්තු මස 25 වන දින හෝ එදිනට පෙර මේ අධිකරණය වෙත ඉදිරිපත් කරන ලෙස ඔබට මෙයින් නියම කරන අතර, එකී දිනයෙහි හෝ එදී දිනට පෙර උත්තර ඉදිරිපත් කිරීම ඔබ විසින් පැහැර හැරිය හොත් නඩුවේ කටයුතු තවදුරටත් කරගෙන යන බවත් එක පාර්ශිකව නඩුව විභාග කරන බවත් ඔබ විසින් දැනගෙන සිටිය යුතු යැයි මෙයින් නියම කරනු ලැබේ.

ඔබ ලේඛණ ගත නීතීඥවරයෙකු මගින් පෙනී නොසිටින්නේ නම්, සියලු නෛතික දැන්වීම් භාරදෙනු ලැබිය හැකි ලිපිනයක් සඳහන් කරමින් සංදේශයක් ඉදිරිපත් කරන ලෙස ඔබට මෙයින් වැඩිදුරටත් නියම කරනු ලැබේ.

අධිකරණයේ අණ පරිදි

රෙජිස්ට්‍රාර්

සැලකිය යුතුයි - නඩුව විභාග කිරීමේ දිනට නියම කිරීම පිණිස, විවෘත අධිකරණයේ දී ඉහත සඳහන් නඩුව අඬගසනු ලබන දිනය පිළිබඳ දැන්වීම් ලබා ගැනීමට ඔබ කැමැත්තේ නම්, ලියාපදිංචි ලිපිනයක් සහ ලියාපදිංචි තැපෑලෙන් එවීම පිණිස තැපැල් ගාස්තු වශයෙන් අවශ්‍ය වටිනාකම මුද්දර ද මේ අධිකරණයේ රෙජිස්ට්‍රාර්වරයා වෙත සපයන ලෙස 80 වන වගන්තියෙන් ඔබට නියම කරනු ලැබේ.

වර්ෂ 2025 ක් වූ 08 මස 04 වන දින දීය.

අ/ක රෙජිස්ට්‍රාර්

(CS 3791 E)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முக்கிய அறிவித்தல்

**Ceylon Green Life Plantation (Pvt) Ltd**
நிறுவத்துடன் வணிக உறவுகளில் ஈடுபட்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு



## திரு.S.M.ஆனந்தராஜன்

தேசிய அடையாள அட்டை இல.81296750V
முகவரி: ராமகிருஷ்ணா வீதி, களுதாவளை 03, கல்வாஞ்சிக்குடி

மேற்கண்ட நபர் எமது நிறுவனத்தில் துணை பொது முகாமையாளர் (Assistant General Manager) பதவியில் பணியாற்றியவர். 2025 ஆகஸ்ட் 04ம் திகதி முதல் எமது நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் மேற்படி நபர் எமது நிறுவனத்தின் பெயரில் மேற்கொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையையோ அல்லது பரிவர்த்தனையையோ தொடர்பாகவும் Ceylon Green Plantation (Pvt) Ltd நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

Ceylon Green Plantation (Pvt) Ltd
Seeduwa.

# முக்கிய அறிவித்தல்

**Ceylon Green Life Plantation (Pvt) Ltd**
நிறுவத்துடன் வணிக உறவுகளில் ஈடுபட்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு



## திரு.செல்லத்தம்பி ஜெசிகரன்

தேசிய அடையாள அட்டை இல.781452360V
முகவரி: பவுன்டரி வீதி, பெரியக்கல்லாறு 01

மேற்கண்ட நபர் எமது நிறுவனத்தில் வலய முகாமையாளர் (Zonal Manager) பதவியில் பணியாற்றியவர். 2025 ஜூலை 07ம் திகதி முதல் எமது நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் மேற்படி நபர் எமது நிறுவனத்தின் பெயரில் மேற்கொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையையோ அல்லது பரிவர்த்தனையையோ தொடர்பாகவும் Ceylon Green Plantation (Pvt) Ltd நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

Ceylon Green Plantation (Pvt) Ltd
Seeduwa.

## தோட்டக்காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்சுவேலி நகர எல்லைக்குள், பொலிஸ் நிலைய முன்பாகவும் பெண்கள் பாடசாலை எல்லையுடனும் செல்கின்ற வீதியில் அமைந்துள்ள முப்பத்தாறு பரப்பு எவ்வகை பயிர்களுக்கும் ஏற்ற செம்மண் தோட்டக்காணி வற்றாத கட்டுக்கினற்றுடன் விற்பனைக்குண்டு. குடிதண்ணீர் போத்தலில் அடைப்பதற்கும்,சோலார் மின் உற்பத்தி செய்வதற்கும் வீடமைப்பு திட்டங்களுக்கும் உகந்த இடம்.

தொடர்பு: 0779215550

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் கோப்பாய் சந்தியில் இருந்து 100m தூரத்தில் 2 பரப்பும் 1 குழியும் காணி விற்பனைக்கு உண்டு.

077 132 3348

(CS/3768) J-1

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் 2 வீடுகளுடன் 10.88 perch காணி விற்பனைக்கு உண்டு. திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 09.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை பார்வையிடலாம்.

077 756 0022, 074 323 9544

## காணி விற்பனைக்கு

இருபாலை கிழக்கு அரசடி சந்தி 5 பரப்பு சதுர காணி விற்பனைக்குண்டு. இந்து கோவில். கிறிஸ்தவ தேவாலயம். பாடசாலை அருகாமையில் உள்ளது.

தொடர்பு: 071 841 9892
(க.திருநாவுக்கரசு)

## A/L PHYSICS

A/L Physics வகுப்புகள்.
Theary மற்றும்
Paper Classes

தொடர்புகளுக்கு:
076 498 9961, 076 686 7099

(CS 59055) E

## காணி விற்பனைக்கு

வடக்கு நாரந்தனையில் தம்பாட்டி, தாந்தோன்றி அம்மன் கோயிலுக்கு செல்லும் வழியிலுள்ள காணி உடனடி விற்பனைக்கு உண்டு. காணியை பார்வையிடவும், உரிமையாளரை சந்திக்கவும் 16.08.2025 சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை வருகை தரவும்.

தொடர்பு:- 075 6549 228

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம், சங்கானை.
ஆண்டு 10, O/L, A/L கலைப்பிரிவு மாணவர்களுக்கு சிறு குழுக்களாக அனுபவம் மிக்க ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள் மற்றும் SPOKEN ENGLISH
குபேரன் கட்டட மாடி, சங்கானை.

Tel:- 077 675 1649

## சிறிய வீட்டுடன் காணி விற்பனைக்கு

விளாத்தியடி வீதி. உயரப்புலம், ஆனைக்கோட்டை 1 1/2 பரப்பு காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 922 5501, 077 985 3040



## காலமானார் ஜிம் லவெல்

நிலவை முதன்முதலில் சுற்றி வந்த விண்வெளி வீரர்களில் ஒருவரான, ஜிம் லவெல் தனது 97ஆவது வயதில் நேற்று காலமானார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Rooms நாள் வாடகைக்கு

திருநெல்வேலியில் A.C Rooms நாள் வாடகைக்கு, 5 Rooms, 2 Halls, Kitchen உள்ள வீடு ஒன்றில் Rooms நாள் வாடகைக்கு கொடுக்கப்படும். முழு வீடாகவும் நாள் வாடகைக்கு கொடுக்கப்படும், Rooms அல்லது முழு வீடாகத் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவும்

**074 206 0557** What app
**077 959 7158**
**0049 163 4499 578**

## கல்வித் துறையில் சாதனையாளர் விருது வழங்கல் - 2025

**கல்வித்துறையில் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வுபெற்ற கல்வியாளர்களிற்கான சாதனையாளர்கள் விருதுகள் - 2025 . வழங்கப்படவுள்ளன.**

கல்வித்துறையில் ஓய்வுபெற்ற (வயது 60 - 65) வயதிற்குட்பட்ட கல்வியாளர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை தயாரித்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்க முடியும்.

தங்களது சமய, சமூகப் பணிகளையும் குறிப்பிடவும். விருதுகள் BMICH இல் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி : 15.08.2025 ஆகும்.

தொடர்புகளுக்கு: **074 112 7636** (CS 3815) A

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மக்கள் வங்கிக்கு அருகில் 1 1/2 பரப்பு 2 பரப்பு, 2 1/2 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு.

பலாலி வீதி 50 மீற்றர் தூரம்,

திருநெல்வேலி சந்தி 200 மீற்றர்.

தொடர்பு: **077 253 2575**

## கண்ணீர் அஞ்சலி

### பகவதியம்மா இரத்தினேஸ்வரசர்மா

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், துர்க்காபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், கீரிமலை மாரியம்மனின் நிரந்தர பக்தையுமான பகவதியம்மா நேற்று முன்தினம் அம்பாளின் பாதார விந்தங்களை சென்றடைந்தார்.

இருபத்துநான்கு மணிநேரமும் மாரியாச்சி, மாரியாச்சி என அம்பாளையே தியானித்து அனைத்தையும் அம்பாளுக்கே அர்ப்பணித்த பகவதியம்மாவின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மாரியாச்சி சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆதீன கர்த்தாவும்
மாரியாச்சி அடியவர்களும்,
ஸ்ரீ மகா முத்துமாரியம்மன்
தேவஸ்தானம், கீரிமலை.**

**நகு[illegible]
உமாப[illegible]க்கள்**

# அத்துரலிய ரத்தன தேரருக்கு சி.ஐ.டி. வலைவீச்சு

கொழும்பு, ஓக.10


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரரை கொழும்பு குற்றப்பிரிவு அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

அபேஜன பல கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரரைக் கடத்திய குற்றச்சாட்டில் அத்துரலிய ரத்தன தேரர் கைதுசெய்யப் படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 08 . 1946



மறைவு 09 . 08 . 2025

### சதாசிவம் பாலசிங்கம் (அளவெட்டி)

அளவெட்டியைச் சேர்ந்த சதாசிவம் பாலசிங்கம் அவர்கள் நேற்று (09.08.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - மகேஸ்வரி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், பாலசிங்கம் கமலாதேவியின் கணவரும், பா.கஜேந்திரன் (அளவெட்டி, ஸ்ரீ துர்க்கா ஜுவல்லஸ்), வே.சுபாஜினி (ஆசிரியர், வட்டுக் கோட்டை யா/காரைநகர் இந்துக் கல்லூரி); பா.ஹரிகரன் (கனடா) ஆகியோரின் தந்தையும், பா.லதா (அளவெட்டி), தி.வேற்கரன் (ஸ்ரீகரன் புக் சென்ரர், சுன்னாகம்), ஹ.சுரேகா (கனடா) ஆகியோரின் மாமனாரும், க.வர்சினி, க.சர்வஜன் (அளவெட்டி), வே.அஸ்வினி, வே.அஸ்விகன் (வட்டுக்கோட்டை), ஹ.அக்சரா, ஹ.அபிரா, ஹ.அஸ்விதா (கனடா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இ.ஞானேஸ்வரி, ச.சிறிராணி மற்றும் ச.சாந்தினி (லண்டன்), து.சிறிதரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும், த.சண்முகநாதன் (வவுனியா), க.இராஜேந்திரன் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான ச.சந்திரகாந்தன், க.சண்முகராசா மற்றும் சி.சசிகலா (யாழ்ப்பாணம்), ச.இராணியம்மா (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2025) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 12.30 மணியளவில் அளவெட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CR 45978) A

**தகவல்: குடும்பத்தினர்.**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பான்சிக் கடைக்கு ஆண் / பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **077 132 4319**

## வேலையாட்கள் தேவை

Hard Wear ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: **021 222 8307**
**077 673 1018**

## பணிப்பெண் தேவை

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கிநின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு: **077 979 6593**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**கடந்த 12.07.2025 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி**

### அமரர் சிவகோசரி இந்திரஜோதி அவர்களின்

அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (09.08.2025) சனிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (11.08.2025) திங்கட்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைந்த செய்தி அறிந்து துயர்பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CS 3814) A

**கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் விழிப்புணர்வு நடைபவனி!



மன்னார், ஓக.10
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிர்வகிக்கப்படுகின்ற இளைஞர் கழகங்களுக்கான 19 ஆவது தேசிய இளைஞர் சம்மேளன தெரிவு சர்வ தேச இளைஞர் தினமான நாளைமறுதினம் ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

அதனையொட்டி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நாடுமுழுவதும் விழிப்புணர்வு நடைபயணம் முன்னெடுக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்திலும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்த விழிப் புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஸார் பகுதியில் ஆரம்பமான குறித்த நடைபயணம் பிரதான வீதியூடாகச் சென்று மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் அமைந் துள்ள மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தைச் சென்றடைந்தது. (ச-56,60)





கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் மாந்தை மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் பிரேம்குமார் தலைமையில் மாந்தை மேற்கில் உள்ள பிரதான வீதிகளில் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர், பணியாளர்கள், பிரதேசசபைப் பணியாளர்கள், மருத்துவம னைப் பணியாளர்கள், இராணுவத்தினர் எனப்பலர் இணைந்து சிரமதானப் பணியை முன்னெடுத்தனர். இதன்போது மாந்தை சந்தியில் இருந்து வட்டக்கண்டல் வரையிலான பிரதான வீதி யில் சிரமதானப் பணிகள்நடைபெற்றன. (ச-25, 56)

# மடு அன்னைக்கு கொடியேற்றம்



மன்னார், ஓக.10
மன்னார் மறைமாவட்டத்தில் யாத்திரிகர் ஸ்தலமாக விளங்கும் மரு தமடு அன்னையின் ஆவணிமாதப் பெருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப் பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை பாப்பரசரின் கொடியையும், மடுப் பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மடு அன் னையின் கொடியையும், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநேசன் அடிகளார் இலங்கைத் திருச்சபையின் கொடியையும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் நடைபெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ச-41-60)

# தாகம் தீர்க்கும் பணியில் நல்லூர் நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஓக.10
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலய நிர்வா கத்தினால் முதன்முறை யாக ஆலயத்தின் பின் பக்கமாக இந்தமுறை எழில்மிகுந்த அலங்காரப் பந்தல் அமைக்கப்பட் டுள்ளது.

அந்தப் பந்தலின் ஒரு பகுதியில் 'அலங்கார நல் லூரான் நிழற்பொதிகை' எனும் பெயரில் பந்தல் அமைத்து அடியவர்க ளின் தாகம் தீர்க்கும் பணி முன்னெடுக்கப் பட்டுவருகிறது.

இந்தப் பணிகளில் நல் லூர்க் கந்தன் தொண்டர் கள் ஈடுபட்டுள்ளனர். (ச-25,66)

# ஆட்சியைப் பிடிப்பதற்குரிய வேலைத்திட்டத்தில் மொட்டு

## ஜானக வக்கும்புர தகவல்

கொழும்பு, ஓக.10
எதிர்காலத்தில் நாட்டில் ஆட்சியைப் பிடிப்பதற்குரிய வேலைத்திட்டத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி முன்னெடுத்துவருகின்றது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவளித்தவர்களில் 95 சதவீதமா னோர் நாமல் ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க மீண்டும் கட்சிக்குத் திரும்பியுள்ளனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வெற்றிபெற்ற தொகுதிகளுக்கு நாமல் ராஜபக்ச தற்போது நேரடிப் பயணம் மேற்கொண்டு சந்திப்புகளை நடத்திவருகின்றார். கட்சியைப் பலப்ப டுத்தி, ஆட்சியைப் பிடிப்பதற்குரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (எ-44)



அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-66)

# குருதிக்கொடை முகாம்



யாழ்ப்பாணம், ஓக.10
யாழ்.போதனா மருத்துவமனை இரத்தவங் கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும்வகையில் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனின் திட்டத் துக்கு அமைவாகத் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குரு திக்கொடை முகாம் நிகழ்வு தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை தெல்லிப்பழைப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-41-66)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கூட்டுறவாளர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.10

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் 103 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வு தந்தை செல்வா கலையரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சமாசத்தின் தலைவர் திருமதி சரோஜினிதேவி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.திருலிங்கநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டதோடு பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ச-25, 17,159)



சாவகச்சேரி நகரசபையின் மீசாலை வட்டார உறுப்பினரும் சபையின் சுகாதாரக்குழுத் தலைவருமான வ.பிரகாஸ் தனது முதல் மாத வேதனத்தில் சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்துக்கு இரண்டு குப்பைசேகரிக்கும் பிளாஸ்ரிக் தொட்டிகளை கடந்த புதன் கிழமை அன்பளிப்புச் செய்தார். (ச-25, 9)

# இனமதபேதமின்மை எனக்கூறி சமஷ்டியை மழுங்கடிக்காதீர்கள்

### வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு தெரிவிப்பு

வவுனியா, ஓக.10

வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக முன்வைத்துவரும் சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கையை “இன மத பேதமின்மை” எனும் கோஷத்தின் பின்னால் மறைக்கமுடியாது என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு தெரிவித்துள்ளது.




நிலையான அரசியல் தீர்வுக்கான நூறுநாள் செயல்முனைவின் மூன்றாம் வருடத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் வவுனியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் அதிகாரம் உரியமுறையில் பகிர்ந்துகொள்ளப்படவில்லை. மாறாக மொழிரீதியான, மத ரீதியான அடக்குமுறைகள் மேலோங்கின. இந்த அடக்குமுறைகள் அனைத்தையும் வைத்துக்கொண்டு ‘இனமத பேதமின்மை’ குறித்து அரசு கதைப்பது நேர்மையின்மையாகும்.

இனவாதத்தில் சார்ந்திருந்த பழைய அரசுகளைப் போல் இல்லாது தேசிய மக்கள் சக்தி அரசு, நிலையானதும் கௌரவமானதும் உரிமைகளுடன் கூடியதுமான சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்தவேண்டும்.

சமஷ்டி அரசியல் தீர்வு என்பது நாட்டைப் பிரிப்பதல்ல. அது மிகவும் உயரிய ஜனநாயக அரசமைப்பின் வெளிப்பாடாகும் - என்றனர். (ச-41-110)



## வற்றாப்பளை ம.வி. கரப்பந்தாட்டத்தில் இரண்டாமிடம்

முல்லைத்தீவு, ஓக.10

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்டக் கரப்பந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு வற்றாப்பளை மகாவித்தியாலய 16வயது மற்றும் 18வயதுப் பெண்கள் அணியினர் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டனர். இவர்களை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த வெள்ளிக்கிழமை நேரில் சென்று வாழ்த்தினார். (ச-41-246,26)



## விழிப்புணர்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக .10

நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழிற்றுறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சமன் சிறிலால், பிரதம நிர்வாக அதிகாரி யூட் பெர்னாண்டோ, கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் சசிகதிமெல், மாவட்ட உதவி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், வங்கிகளின் பிரதிநிதிகள், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர், துறைசார் உத்தியோகத்தர்கள், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ச-41-66)

## தகவல் அறியும் உரிமை விழிப்புணர்வு ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஓக.10

மக்கள் அரசாங்கத்திடம் இருந்து தகவல்களை எவ்வாறு பெறுவது? ஊழல் மற்றும் அரச துறைத் தாமதங்களுக்கு எதிராக எப்படி உரிமையைப் பயன்படுத்துவது? தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்றால் என்ன? என்பது தொடர்பான விழிப்புணர்வு ஒன்றுகூடல் கடந்த வெள்ளிக்கிழமை குரும்பசிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது ஐ.எம்.சி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் எஸ். தினேஷ் விழிப்புணர்வை வழங்கினார்.

மருத்துவர் வெற்றிவேல் நாகநாதன், வலி. வடக்கு உபதவிசாளர் பொன்னுத்துரை தங்கராஜா, சட்டத்தரணிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகல் கனவு காணும் ராஜபக்சக்கள்!

## அரசு கிண்டல்

கொழும்பு, ஓக.10

தமக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளுக்கு அஞ்சி, அவற்றைத் திசைதிருப்பும் நோக்கிலேயே '2029 ஜனாதிபதி' என்ற கதையைக்கூற ராஜபக்சக்கள் ஆரம்பித்துள்ளனர் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2029 இல் நாமல் ஜனாதிபதி என்ற தகவல் திட்டமிட்ட அடிப்படையிலேயே பரப்பப்பட்டுவருகின்றது. ஜனாதிபதியாவதற்கு முன்னர் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஓரிரு சபைகளிலாவது வென்று ஆட்சி அமைத்திருக்கவேண்டும் அல்லவா? அத்தேர்தலில்கூட அவர்கள் மண்கவ்வினர்.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் சி.ஐ.டி. ஆகியன ராஜபக்சக்களுக்கு எதிராக உள்ள விசாரணைகளை உரிய வகையில் முன்னெடுத்துள்ளன. சரியான திசையை நோக்கி விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. எனவேதான் விசாரணை அதிகாரிகளுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் நோக்கில், விசாரணையைத் திசைதிருப்பும் வகையில் இப்படியான பரப்புரை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அது பகல் கனவு மாத்திரமே - என்றார். (ச-44)

### நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

கட்டிடத்திற்கு தேவையான சகல இரசாயனப் பொருட்கள் (நீர்க்கசிவை தடுப்பது உட்பட) வேறு இடங்களை விட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.
கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
தரம் குறைந்த போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்


Flatinum Flex


Synroof

North and East Engineering

**077 524 4177, 077 232 3000**

### வீடு விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவலர் றோட் ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் அமைதியான சூழலில் நவீன முறையில் 3 பரப்புடன் கூடிய Tiles பதிக்கப்பட்ட அழகியவீடு விற்பனைக்கு உண்டு.**

தொடர்பு:- **07771 07771**

(CS/59082) J-1

### வேலையாட்கள் தேவை

**தென்மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.**
**சம்பளம் - 50,000/-**
**உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.**

தொடர்பு:- **077 480 3379**

(CS/59079) J-1

### தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கம்

**தற்காலிக கடை ஏலம்**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மகோற்சவத்தினை முன்னிட்டு தற்காலிக கடை அமைப்பதற்கான ஏலம் எதிர்வரும் 17.08.2025 அன்று 2.00 மணியளவில் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

**குறிப்பு:- கடை ஏலம் எடுப்பவர்கள் அன்றைய தினம் முழுத்தொகையினையும் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.**

**077 027 9693** **இணைச் செயலாளர்**

### தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கம்

**விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்**

17.08.2025 அன்று காலை 9.00 மணியளவில் மகோற்சவ கால விசேட பொதுக்கூட்டம் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் உரிய நேரத்திற்கு வருகைதந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**இணைச் செயலாளர்**

### மு/ வித்தியானந்த கல்லூரி முள்ளியவளை

### பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

- காலம் :- 24.08.2025 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் :- காலை 9.00 மணி
- இடம் :- கேட்போர் கூடம்

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர் / செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**மு/வித்தியானந்த கல்லூரி**
**முள்ளியவளை**

(CS/59060) J-1

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

**ஓமேகா அருள்ராஜா - 3A**
(கலைப்பிரிவு)

**யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இருந்து 2024 ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளினை பெற்று கல்லூரிக்கு பெருமை தேடித்தந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**கலைப்பிரிவு**

ஆரணி பரமேஸ்வரன் A2B
முகமட் றிபாய்பாத்திமா புஸ்ரா 3B

**வர்த்தகப்பிரிவு**

முகமது றிசான் யாசிர் ABC
தனுஷிகா சிவதாசன் 2BC

**உயிரியல் பிரிவு**

முகமட் சிமாம் 2AC

**பழைய மாணவர் சங்கம்**
**யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி**

(CS/59078) J-1

### Uber வேலை வாய்ப்பு

**இப்போது யாழ்ப்பாணத்தில் Uber நிறுவனம் பல வழிகளில் வழங்கிவரும் வேலை வாய்ப்புகளில் சாரதிகள் ஆண் / பெண் யார் என்றாலும் இணையமுடியும்.**

**நீங்கள் மோட்டார் சைக்கிள் / முச்சக்கர வண்டி / CAR / VAN வைத்திருந்தால் எம்முடன் இணையலாம்.**

**0707555755 / 0705002051 எனும் எண்ணுக்கு WhatsApp மூலம் என்ன வாகனம் உள்ளது என்று ஒரு மெசேஜ் அனுப்பவும் தேவையான ஆவண விபரம் வரும்**

**குறிப்பு**

- பெண் சாரதிகளுக்கு பெண் பயணிகளிடமிருந்து வரும் சவாரி மட்டும் பெறும் முறைமை எம்மிடம் மட்டும் உள்ளது.
- எமது சிறப்பு தன்மை எந்தவொரு சாரதியின் / பயணியின் தொலைபேசி இலக்கமும் யாராலும் பார்க்க முடியாது ஆகையால் பெண் பயனாளிகள் அச்சம் இல்லாமல் Uber சேவையை பாவிக்க முடியும்.

**எம்முடன் இணைந்தால் மாதம் 150,000/- க்கு மேலதிகமாக சம்பாதிக்க முடியும்**

எமக்கு நீங்கள் வழங்கும் கமிஷன்
**MOTORCYCLE - 0% | TUK - 10% | CAR & VAN - 15%**
**இதை விட வேறு ஒரு மறைமுக கட்டணமும் இல்லை**

**Uber Affiliate Jaffna**
**No.197B, Pungankulam Road, Jaffna**
**0707555755 | 0705002051 | 0705002052 | 0705002053 | 0705002054 | 0705123125 | 0706123125**

### காணி விற்பனைக்கு

**கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையாக 3 1/2 பரப்பு சுற்றுமதில் காணி, நல்ல அயற்சூழலில், குழாய்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.**

தொடர்புகளுக்கு:
**077 903 7538**

### உடனடி விற்பனைக்கு

அலுவலக பாவனையில் இருந்த Printer, Laptop, Photocopier, A/C மற்றும் Scanner, Washing Machine, Fridge உடனடியாக மலிவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **077 666 5628**

### விற்பனைக்கு

MD 902 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
**021 222 6627**

(CS/59075) J-1

### காணி குத்தகைக்கு உண்டு

வசாவிளானில் 12 பரப்புக் காணி குத்தகைக்கு உண்டு.
முந்திரிகை/ முருங்கைப் பயிர்செய்கை செய்ய உகந்தது.
சுற்றி கம்பி வேலி அடைக்கப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு

பிரபா- **077 493 8304**

(CS/57921) J-1


### சிறந்த நிலம் விற்பனைக்கு!

- மீசாலை கிழக்கு - வீட்டு நிலம்
- அல்லாரை தெற்கு - வீட்டுடன் தென்னங்காணி
- கச்சாய் (புங்கடி) - வயல், தென்னங்காணி

விலை பேசித்தீர்மானிக்கலாம்
தொடர்புகளுக்கு:-
**077 6544 540**

(CR/45765) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரையொதுங்கிய படகால் புங்குடுதீவில் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 10
யாழ்ப்பாணம் புங்குடுதீவு கடற்கரைப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை இரவு மீன்பிடிப் படகொன்று கரை ஒதுங்கியுள்ளது.
ஆள்கள் எவருமற்ற நிலையில் மீன்பிடி வலைகளுடன் மாத்திரம் குறித்த படகு கரை ஒதுங்கியுள்ளது. சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-66)

# பிள்ளையான் எழுதிய கடிதம் சி.ஐ.டி.யினரால் விசாரணை

கொழும்பு, ஓக.10
சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனால், அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதனிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணை நடத்தியுள்ளனர்.
மட்டக்களப்பில் புணர்நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகத்தைத் திறந்து மக்கள் பாவனைக்கு கையளிக்குமாறு வலியுறுத்தி, சிறையில் உள்ள பிள்ளையான் கையெழுத்திட்ட கடிதம் ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தது.
அந்தக் கடிதம் கடந்த 30ஆம் திகதி மட்டக்களப்பு மாநகர முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.
இதனையடுத்தே அந்தக் கடிதம் தொடர்பாக மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதனிடம், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.
முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 83 வது பிறந்த நாள் நினைவும் 11 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும்

மலர்வு 01 . 07 . 1942 — உதிர்வு 11 . 08 . 2014



**அமரர் தம்பிராசா தவமணி**

திதி - ஆடித்திங்கள் அபரபக்கப் பிரதமை

ஆண்டுகள் பதினொன்று ஆனாலும்
அன்னையே உங்கள்
அன்பின் அரவணைப்பு என்றும்
எம்மனதை விட்டகலாது
எமது ஈரவிழிநீரால் உங்கள்
பாதமலர் இறைஞ்சுகின்றோம்
உங்கள் நீங்காத நினைவு நிழல் என்றும் எம்
மனதிலே நிலைத்திருக்கும்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மஞ்சத்தடி
இணுவில்
077 645 8440

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 03 . 1947 — உதிர்வு 10 . 08 . 2007



**அமரர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்**

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை)

அப்பா!
எம் உள்ளங்களில் நிறைந்தவர்
எம் உணர்வுகளில் கலந்தவர்
ஆண்டுகள் பல கடந்தாலும் – எம்முள்
நிரந்தரமாய் உறைபவர்


"கணிகை"
அல்வாய் வடக்கு
அல்வாய்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள்

(CS/59061) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 06 . 1943 — மறைவு 08 . 08 . 2025



**திருமதி கனகமணி கனகசபை**

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி கனகசபை அவர்கள் கடந்த (08.08.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், தம்பு - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், சகுந்தலை (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை) அன்புத் தாயாரும், ரட்ணகுமாரின் அன்பு மாமியாரும், ஸ்ரீதுவாரகா, அபராஜிதன், சாருஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ருக்குமணி, இராசம்மணி, நவமணி, பூபாலசிங்கம் ஆகியோரின் இளைய சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லத்துரை, துரைசிங்கம், தங்கராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வராஜன் (கனடா), வித்தியாதரன் (கனடா), மணிமேகலா (கனடா), மணிமேகலை (அவுஸ்ரேலியா), ஜெயந்தினி, ஜெயகாந்தன் (கனடா), ஜெயவதனி (கனடா), ஜெகநாதன் (கனடா), ஜெயதர்சினி, ஜெயஆனந்தன் (நியூசிலாந்து), ஆகியோரின் சிறிய தாயாரும் ஆரணி, குருதேவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

25, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CB/15767) J-1

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 04 . 1935 — மறைவு 22 . 07 . 2024



**இராசரத்தினம் பாலசிங்கம்**

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)
(நவக்கிரி, புத்தூர்)

ஓராண்டுகடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் என்றும்
உயிர்ப்பாய் நிலைத்திருக்கும்.
காலங்கள் கரைந்தாலும்
ஆயிரம் உறவுகள் அருகிருந்தாலும் எம்
கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் வெளிச்சம்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்
077 158 7105

இராசவீதி, தோப்பு,
அச்சுவேலி.

(CS/59063) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின்...

பதிவுசெய்யுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

முல்லைத்தீவு - முத்தையன்கட்டுப் பகுதியில், இரா ணுவ முகாமுக்குள் அழைக்கப்பட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட நபர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்ட போது, சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த.பிரதீபன் சென்றிருந்தார். அவரைக் கண் டதும் பொதுமக்கள் அழுதுபுலம்பி தமது ஆதங்கத் தையும் முறைப்பாட்டையும் முன்வைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் இராணுவத்தின் அடாவடித்தனங்கள் தொடர்பில் முறைப்பாட்டை முன்வைத்தார். இதையடுத்தே, மக்களின் முறைப்பாடுகளை வாக்குமூலமாகப் பதிவுசெய்யுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தர விட்டுள்ளார். (அ-ம-26-35-113-60-20)

## முத்தையன்கட்டு...

தொடர்பிலும் நீதியான விசாரணை நடத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரி வித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு முத்தையன்கட்டு பகுதியில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கேட்டறிந்துள் ளேன். இது தொடர்பில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலாளர் ஆகி யோருடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தியுள் ளது. நீதியான விசாரணை நடத்தப்படுவதுடன், குற்றவாளிகளைத் தண்டிப்பதில் நாங்கள் உறுதியா கவுள்ளோம் - என்றார். (அ-ம-110)

## இராணுவத்தால்...

எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் (வயது-32) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட வராவார்.

முத்தையன்கட்டு குளப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் தற்போது அகற்றப்பட்டுவருகின் றது. முகாமில் இருந்து அப்புறப்படுத்தப்படும் தக ரங்களைத் தருவதாகக் கூறி ஐந்து பேரை இராணு வத்தினர் கடந்த ஏழாம் திகதி அழைத்துள்ளனர். அங்கு சென்றவர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து, அவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இராணுவத்தின் தாக்குதலில் இருந்து மூவர் தப்பித் துத் தத்தமது வீடுகளுக்குச் சென்ற நிலையில், ஒருவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார். இன்னொருவர் காணா மற்போயிருந்தார். அவருக்கு என்ன நடந்தது என் பதை வெளிப்படுத்துமாறு கோரி பொதுமக்கள் நேற்றுமுன்தினம் இரவிரவாகப் போராட்டம் நடத்தி வந்தனர். இவ்வாறான பின்னணியிலேயே, காணா மற்போன அந்த நபர் முத்தையன்கட்டுக் குளத்துக் குள் இருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த.பிரதீபனின் முன் னிலையில் சடலம் மீட்கப்பட்டது. சடலத்தை உடற் கூற்றுப் பரிசோதனை செய்யுமாறும், அதன் பின் னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (அ-ம-26-35-113-60-20)

## சிந்துஜாவின்...

ஏற்பட்ட அதீத குருதிப் போக்குக் காரணமாகவே இறப்புச் சம்பவித்ததாக உடற்கூற்றுப் பரிசோதனை யில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, கடமை யில் இருந்த மருத்துவர், இரண்டு தாதிய உத்தியோ கத்தர்கள் மற்றும் இரண்டு குடும்ப நல உத்தியோ கத்தர்கள் என ஐந்து பேர் பணியிடை நீக்கம் செய் யப்பட்டிருந்தனர். அவர்களில் தாதிய உத்தியோகத் தர் ஒருவரும், இரண்டு குடும்பநல உத்தியோகத்தர் களும் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவால் கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் முற்படுத் தப்பட்டுள்ளனர். இதையடுத்து, சந்தேகநபர்களை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ம-56)

## கையெழுத்துப்...

யாழ்ப்பாணம் செம்மணியில் ஆரம்பமாகும் இந்தப் போராட்டம், தொடர்ச்சியாக ஐந்து தினங்கள் தமிழ கத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட வுள்ளதாக தாயகச் செயலணி அமைப்பினர் தெரி வித்துள்ளனர். (அ-ம-66)

## இராணுவத்தினர்...

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமை யவே அவர்கள் ஐந்து பேரும் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்களில் மூவர் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின் றன என்று பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-113)

## 500 முன்னாள்...

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களின் ஓய்வூதியம் தொடர்பில், அரசாங்கம் மேற் கொள்ளும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நடைமுறைக்கு வந்தால், 500 வரையிலான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஓய்வூதியக் கொடுப்பனவை இழப்பார் கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகமொன்று அரச தகவல்களை மேற்கோள்காட்டி இந்த விடயத்தை வெளிப்ப டுத்தியுள்ளது.

'ஓய்வூதியக் கொடுப்பனவில் வாழும் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங் கத்தின் இந்தத் திட்டத்தால் பாதிக்கப்படுவார் கள். இதனால், சிலர் மருத்துவச் செலவுக ளைக்கூட கவனிக்கமுடியாத நிலை ஏற்படும்' என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் களுக்கான ஒன்றியத்தின் செயலாளர் பிரேம சிறி தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## காற்றாலைத்...

தாவது:-

மன்னார் மக்களின் விருப்பத்துக்கு மாறாக, எந்தத் திட்டங்களும் முன்னெடுக்கப்படாது என்ற வாக்குறுதியை ஜனாதிபதி அநுர வழங் கியுள்ளார். ஆதலால், மன்னாரில் காற்றா லைகளை அமைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் உடனடியாகக் கைவிடப்பட வேண் டும். காற்றாலைகளை அமைப்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள உபகரணங்கள் திரும் பக் கொண்டுசெல்லப்பட வேண்டும். கனிய மணல் அகழ்வு நடவடிக்கைகளும் இங்கு உடனடியாக நிறுத்தப்படவேண்டும் - என்ற னர். (அ-ம-56)

## சஜித்...

நல்லது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதிப் பதவிக்கு திகதியை நிர்ணயித்த சஜித், தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பத வியை காப்பாற்றுவதற்குப் போராடிக்கொண் டிருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு இன்று பலர் போட்டியிட்டு வருகின்றனர். ஆனால், சஜித் எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்வது, அது எங்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமையும். அவர் எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருப்பது அரசாங்கத்துக்கு நல்லது - என் றார். (அ-ம-44)

## ஐ.நா...

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி ஆரம்ப மாகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற் காக ஜனாதிபதி அநுர விரைவில் அமெரிக்காவுக் குச் செல்லவுள்ளார். இந்தக் கூட்டத் தொடரிலேயே ஜனாதிபதி அநுர உரையாற்றவுள்ளார் என்று தக வல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்திய பிரதமர் மோடி, ரஷ்ய ஜனாதிபதி புடின், சீன ஜனாதிபதி ஜின் பிங் உள்ளிட்ட உலகத் தலைவர்க ளுடனும் அநுர இருதரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**

ஈவினை பிள்ளையார் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இன்னும் 1 1/2 வருடங்களில் காய்க்கக்கூடிய தென்னையும் பல பயன்தரும் மரங்களும் இக்காணியில் உள்ளது.

தொடர்புகளுக்கு:- 070 335 3315

**காணி விற்பனைக்கு**

மட்டுவில் தெற்கு, வேரற் கேணி, கந்தசுவாமி கோயில் அருகாமையில் கனகம்புளியடி வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தென்னைச் செய்கைக்கும், வீட்டுமனை அமைக்கவும் உகந்த இருபுறமும் வீதியுடன் தொடுக்கும் மேட்டுக் காணி 6 1/2 பரப்பு உடனடித் தேவைக்காக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 611 7101

(CS/69057) J-1

**விற்பனைக்கு**

யாழ் திருநெல்வேலி பலாலி வீதியில் இருந்து 100m தூரத்தில் 31/4 பரப்பு பலன் தரும் மரங்களுடன் கடையும், வீடும் விற்பனைக்கு.

கொழும்பு கொட்டாஞ்சேனை புளூமெண்டல் வீதியில் தொடர் மாடிக் கட்டடத்தில் நிலப்பகுதி, வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு காலை 10.00 பின் Whatsapp தொடர்பு கொள்ளவும்.

075 999 8241

(CS/69088) J-1

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- Whats app:- +61 421 290 240

(CS/58874) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வெளி மாவட்ட பல்கலைக்கழக மாணவிகளுக்கு தங்குமிடம் மருத்துவ பீடத்திற்கு மிக அண்மையாக ஆடியபாதம் வீதியில் உள்ளது.

தொடர்புகளுக்கு: 076 772 0059
077 166 3859

## மணமகள் தேவை

யாழ். சைவ 1991 இல் பிறந்த, (V) குலத்தைச் சேர்ந்த, இலங்கையில் பிரபலமான நிறுவனத்தில் தொழில்நுட்பவியலாளராக பணியாற்றும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (உள்நாடு அல்லது வெளிநாடு)

(CS/59052) J-1

தொடர்பு:- 072 033 9015

## Express Academy

86, இராஜேஸ்வரி வீதி, அரியாலை.
English Language
By.C.S.K.Mayuran
தரம் 6 முதல் O/L வரை வகுப்புக்கள்
ஆரம்பம் - 13.08.2025 புதன்கிழமை மாலை 5.00 மணி

- Vocabulary
- Structural Grammar
- Spoken and Writing Skills

Contact:- 077 193 0298

(CS/59043) J-1

## உடனடி வேலைவாய்ப்பு

வடமராட்சியில் நன்மதிப்பை பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு கீழ் காணும் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடம் காணப்படுகின்றது.

- கிளை முகாமையாளர் (Branch Manager) - 2

மேற்குறிப்பிட்ட வேலைக்கு அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
(குறிப்பு: இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)

(CS 59051) A

தொடர்புகளுக்கு: 077 269 0764

## வாடகைக்கு

4 அறைகள் மற்றும் 2 இணைந்த குளியல் அறையும் கொண்ட புதிய வீட்டின் மேல்தளம் உடனடியாக வாடகைக்கு உண்டு. தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.

தொடர்புகளுக்கு: 076 772 0059
077 166 3859

## காணி விற்பனைக்கு உண்டு

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் சந்திப்பகுதியில் இருந்து செழியன் வீதியூடாக வருகின்ற இடத்தில் நெற்பரப்பு 15 விஸ்திரணம் உடைய காணி விற்பனைக்கு உண்டு.
தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
பார்வையிடும் நேரம் - காலை 8.00 - 6.00 மாலை

தொடர்புகளுக்கு:- 077 505 8561

## மணமகள் தேவை

யாழ். இந்து, 1979, சூரியன், செவ்வாய், சிங்கப்பூரில் எஞ்ஜினியராகத் தொழில் புரியும் மணமகனுக்குப் படித்த அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றோம். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. வயதெல்லை 36 ஐ விட குறைவாக இருத்தல் விரும்பத்தக்கது.

(CS/59042) J-1

தொடர்பு:- 077 853 6965

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலைக்கு பணியாளர்கள் தேவை

- சுத்திகரிப்பு பணியாளர்கள் (பெண்)
- உதவி பணியாளர்கள் (ஆண், பெண்)
- வாகன ஓட்டுனர்கள் (AD Licence)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Security Officers)

அனுபவம் உள்ளவர்கள்/ புதியவர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம்
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
இடம்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 077 361 8559

## சிப்பாய்கள் பலி

லெபனானின் ஆயுதக் கிடங்கொன்றில் நேற்று ஏற்பட்ட வெடி விபத்தில், ஆறு இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## Spoken English & Grammar Classes

Grade 7 to பட்டதாரிகள்
International School Students
K.Ganesh B.A Pera
077 766 8725

## வேலைக்கு ஆட்கள் தேவை

தொடர்புகளுக்கு:-
077 668 1670

## தச்சு வேலைக்கு ஆட்கள் தேவை

பருத்தித்துறை பிரதேசத்தில் அமைந்துள்ள மரக்காலை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 929 8443

## வேலையாள் தேவை

பகுதிநேர பெண் பொறுப்பாளர் தேவை
இடம் : கொக்குவில்
வேலை நேரம் :
பி.ப 4 - பி.ப 6 வரை
(வாரத்தில் நான்கு நாட்கள்)

(CS 59072) E

தொடர்புகளுக்கு:
077 166 3859

## காணி விற்பனைக்கு

வவுனியா தோணிக்கல் சிவன் கோவில் வீதியில் உறுதிக்காணி. அமைதியான நல்ல சுற்றாடலில் வீடு கட்ட, டியூசன் சென்ரர் நடத்த, பயிர் செய்ய, கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை போன்றவற்றிற்கு உகந்தது. இக் காணிக்கு சொற்ப தூரத்தில் வைரவப் புளியங்குளத்தில் ஒரு பரப்பு 02 கோடிக்கு மேல் விற்கப்பட்டுள்ளது. இக்காணி 50 இலட்சம் மட்டுமே தரகர் தேவையில்லை. விலை பேசலாம்.

தொடர்பு: 076 322 3687

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

நிலப்பரப்பு

- பிரதான இராச பாதை வீதியில் இருந்து 2 வது காணி 50m தூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- இக் காணியில் இருந்து திருநெல்வேலி, பிரதான சந்தை, கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km தூரம்.
- நல்லூர் ஆலயம் 2 km தூரம்.
- ஒரு பரப்பின் விலை 69 இலட்சம்.

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(CS/3800) J-1

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 814 7389
077 986 5457

## காணி விற்பனைக்கு

ஆடியபாதம் வீதியில் இருந்து 100m தொலைவில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0772575712, 0771663859

(CS/59073) J-1

## தங்குமிடம் வழங்கப்படும்

யாழ்/ சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் தொழில்புரியும் பெண்கள் அல்லது கல்வி கற்கும் பெண்களுக்கு தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
021 221 9404, 076 787 6627

(CS/59046) J-1

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதிக்கு கீழ்க்கண்ட பணிகளுக்கான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- சுத்திகரிப்பு பணியாளர்கள்
- பாதுகாப்பு பணியாளர்கள்
- சலவை உதவியாளர்கள்
- உதவிக் கணக்காளர்

தொடர்புகளுக்கு:-
076 624 8529
076 345 3485
077 780 3203
Email- hrvalampuri@gmail.com

(CS/59080) J-1

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி, கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு.
Point Pedro வீதியில் இருந்து 350m, நல்லூர் கோவில் 1.7Km

(CS/58876) J-1

தொடர்பு:- 077 185 4870

## VACANCY

Showroom Manager (Jaffna)

- * 2-3 Years sales & Retail Management Experience.
- * A/L Pass.
- * Ability to speak Sinhala or English with Tamil language

Contact- 0773337761

LANKATILES

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.08. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள் — வாளாதே
சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புள்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை (10.08.2025) சிகரம் :151

# அமெரிக்கப் பின்னணியும் அநுர அரசாங்கமும்

அ.நிக்ஸன்



செம்மணிப் புதைகுழி விவகாரம் தமிழ் இன அழிப்பின் முழுமையான ஆதாரம் என்று தெரிந்தும், தமிழ்த்தேசியக் கட்சிகள் குறிப்பிட்ட ஒரு எல்லைக்கு மேல் சென்று ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை.

2015 ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் எவ்வாறு தமிழ்த் தரப்பு ஏமாற்றப்பட்டதோ, அதேபோன்றதொரு அணுகுமுறையே பத்து ஆண்டுகளின் பின்னர் மிகத் தெளிவாக தெரிகிறது. அதுவும் ஒக்ரோபர் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூடவுள்ள நிலையிலும், பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடையும் பின்னணியிலும் இந்த ஏமாற்றத்தை தமிழர் தரப்பு எதிர்கொள்ளவுள்ளது.

கூட்டுரிமை அற்ற செயற்பாடுகள் கட்சி அரசியல் நடவடிக்கைகள் இதற்குக் காரண காரியம் என்று கூறலாம். 2015 ஆம் ஆண்டு வட மாகாணசபை தமிழ் இன அழிப்புக்கான சர்வதேச நீதி கோரிய தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. அதைப்பெருத்த வில்லங்கமான நகர்வாக புவிசார் அரசியலில் ஈடுபட்டிருந்த சர்வதேச தரப்புகள், குறிப்பாக மேற்கு நாடுகளின் தரப்புகள் கணிப்பிட்டன.

ஏனெனில், வெறும் மனித உரிமை மீறல்களாகவும், போர்க் குற்றங்களாகவும், மனிதத்துவத்துக்கெதிரான குற்றங்களாகவும் இலங்கையில் போரில் ஈடுபட்டிருந்த இரு தரப்புகளையும் குற்றங்களிற் சமப்படுத்தி தமது புவிசார் நலன்களுக்கு ஏதுவான ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தும் நிகழ்ச்சிநிரலுக்கு நேர் முரணான நிலைப்பாட்டை ஈழத்தமிழர் விடுதலை அரசியலில் உயிர்த்தெழச் செய்யும் வலு வட மாகாணசபையின் அந்தத் தீர்மானத்துக்கு இருந்தது. தற்போது மீண்டும் 2025 ஆம் ஆண்டு அதையொத்த வகையில் ஈழத்தமிழர் தரப்பு குறிவைக்கப்படுகின்றது. அப்போது போலவே தற்போதும் இந்த வெளிப்பின்னணியைப் பலரும் அறியாதுள்ளனர்.

## இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையை நீர்த்துப்போகச் செய்யும் இரகசிய நகர்வுகள் கொழும்பில்!

இந்தக் குறிவைப்பில் ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, சில ஸ்கண்டிநேவிய நாடுகள் ஆகியவற்றில் ஒரு வலைப்பின்னலாக அந்தந்த நாடுகளின் அரச உதவிகளோடு இயங்கும் சில அமைப்புகள், குறிப்பாக சுவிற்சர்லாந்து நாட்டின் தூதரக அனுசரணையோடு இலங்கையில் தமது நிகழ்ச்சி நிரலை வெளிப்படுத்திக் கொள்கின்றன. அரசுகளின் உதவிகளோடு இயங்கும் இந்த அமைப்புகள் அரசசார்பற்ற தன்னார்வ நிறுவனங்கள் என்று தம்மைத் தாமே விளம்பரப்படுத்திக்கொள்வது வழமை. இந்த அமைப்புகள் அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளின் புவிசார் அரசியல் தேவைகளுக்காக செயற்படுவதும் வழமை.

ஆகவே இது குறித்த விழிப்புணர்வு தமிழ்த்தரப்பிடம் ஏற்பட வேண்டிய தேவை மீண்டும் எழுந்துள்ளது. இந்த வகையில், இரண்டு கேள்விகள் இங்கு முக்கியமானவை.

2015 இல் நடந்தது என்ன, 2025 இல் நடக்கப் போவது என்ன என்ற கேள்விகளே அவை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 30/1 தீர்மானம் ஒக்ரோபர் மாதம் 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இலங்கையில் 2015 ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து நிறைவேற்றிய தீர்மானமாக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானம் ஒரு புறம் நிறைவேற, மறுபுறம் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சில அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துச் செயற்படுவது என்றும், இன்னொரு புறத்தில் அமெரிக்க இராணுவத் தரப்போடு இலங்கை சில முக்கியமான உடன்படிக்கைகளை மேற்கொள்வது என்றும் திரைமறைவிலான உடன்பாடுகளோடு, மங்கள சமரவீரவுடன் சில புலம்பெயர்த் தமிழ்த் தரப்புகளையும் இணைத்து சமாந்தரமான நகர்வுகள் தொடுக்கப்பட்டிருந்தமை பலருக்கு நினைவிருக்கலாம். ஆனால், இவற்றை ஆழமாகக் கிரகிக்கும் தன்மை பெருமளவுக்கு தமிழர் தரப்புகளுக்கு அப்போது இருந்திருக்கவில்லை. ஏதோ மேற்குலகம் ஈழத்தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத்தந்துவிடும் என்ற மாயை பரவலாக தமிழர் தரப்பைப் பல முனைகளிலும் பீடித்திருந்தது. இன அழிப்புக்கான சர்வதேச நீதியை ஈழத்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து கோரத் தவறியிருந்தமையால், மாகாணசபைகளின் மக்களாணையைப் பயன்படுத்தியாவது அதைச் சாதிக்கலாமா என்பதாக மக்கள் தளத்தில் இயங்கிய அமைப்புகளும் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் சிலரும் 2015 ஆம் ஆண்டு சிந்தித்திருந்தனர். இன அழிப்பு என்ற பிரதான குற்றம் குறித்த சர்வதேச நீதியின் தேவை பற்றி மாகாணசபை உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், காலஞ்சென்ற அன்ரனி ஜெயநாதன் போன்றோர் தீவிரமாக அப்போது குரல் எழுப்பியும் வந்தனர்.

ஆரம்பத்தில், அவர்களின் குரல் வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரனை பெரிதாக ஈர்த்திருக்கவில்லை. இருப்பினும் விரைவில் அவரே அந்தத் தீர்மானத்தை முன்னெடுத்து நிறைவேற்றும் நிலை ஏற்பட்டது.

விளைவாக, கொழும்பில் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட 2015 ஜனவரிக்கும் ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேறவிருந்த அதே ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குமிடையில், பெப்ரவரி மாதத்திலேயே விக்னேஸ்வரன் தலைமையில் இன அழிப்புக்கு சர்வதேச நீதிகோரும் தீர்மானம் மாகாணசபையில் ஏகமனதாக நிறைவேறியது. குறித்த தீர்மானத்தை இறுதிப்படுத்துதில் அப்போது விக்னேஸ்வரனுக்கு ஆலோசகராகச் செயற்பட்ட நிமலன் கார்த்திகேயன் கனதியான பங்கை ஆற்றியிருந்தார். அவ்வாறான ஒரு தீர்மானம் நிறைவேறிவிடக் கூடாது என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஆ. சுமந்திரன் பெரும் போரையே தொடக்கியிருந்தார்.

ஒரு வகையில் சிவாஜிலிங்கத்தின் இடைவிடாத நகர்வுக்கு எதிராக சுமந்திரன் தொடக்கிய போரினால் ஏற்பட்ட எதிர்வினையாகவே விக்னேஸ்வரனும் நிமலனும் இந்தத் தீர்மானத்தைத் தமது கையில் எடுக்கும் நிலை ஏற்பட்டது எனலாம். இது உள்ளார்ந்த நிலை. வெளியில் நடந்தது என்ன? புலம்பெயர் ஈழத்தமிழர்கள் சிலரின் அயராத முயற்சியால் இந்தத் தீர்மானம் குறித்த அழுத்தம் வட மாகாண சபைக்குள் பாய்ச்சப்பட்டிருப்பதாக ஐரோப்பாவில் இருந்து இயங்கும் சில ஆழ்நிலைத் (Deep State) தரப்புகள் தகவல்களைத் திரட்டிக் கணிப்பீடுகளை மேற்கொண்டன. ஜேர்மனி, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, ஸ்கண்டிநேவிய நாடுகள் ஆகியவற்றில் இருந்து சூழ்ச்சித்தனமாக இயங்கும் ஆழ்நிலைத் தரப்புகளே இவை.

இவற்றுள் சில மேற்கத்தைய தன்னார்வ நிறுவனங்கள், சில பல்கலைக்கழகங்கள், சிலர் வெளிநாட்டு அமைச்சுகள் மற்றும் அபிவிருத்தித் திணைக்களங்களில் கடமை புரிந்தோர். இவர்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்த கொழும்புத் தூதரகங்களின் அதிகாரிகளும் உள்ளடங்கியதாக இந்த ஆழ்நிலைத் தரப்பு இயங்கியது. வடமாகாணசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் அப்போது தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த மறைந்த செல்வி ஜெயலலிதாவின் உறுதியான நிலைப்பாட்டுக்குப் பலம் சேர்த்தது.

அதற்கும் இரண்டு வருடங்களுக்கு முன்னர், 2013 இல் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு ஜெயலலிதாவைச் சந்தித்து கருத்துத் தாக்கம் செலுத்தியிருந்த போதும், 2015 இல் ஈழத்தமிழர் நிலைப்பாட்டுக்கு முரணாக அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதை நேரடியாகவே ஜெயலலிதா சாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஈழத்தமிழர் சார்பான பலச் சமநிலையை 2015 இல் தமிழக அரசு சர்வதேச மட்டத்தில் உயர்த்தியிருந்தது. விக்னேஸ்வரன் இன அழிப்புத் தீர்மானத்தை 2015 பெப்ரவரியில் கொண்டு வந்திருந்தாலும், அதே ஆண்டு ஒக்ரோபரில் ஜெனிவாவில் அமெரிக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அதையும் ஆதரித்தார். ஆனால், ஜெயலலிதா அவ்வாறு விக்னேஸ்வரனைப்போல இரட்டைப் பேச்சுப் பேசவில்லை. தெளிவாக, அந்தத் தீர்மானத்தைக் கண்டித்தார் என்பது இங்கு குறிப்பாக நோக்கப்படவேண்டியது.

அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்தோடு வட இந்திய பொருளாதார நிறுவனங்களிற் சிலவற்றையும் இணைத்து அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரசிங்க வடக்கு மாகாணத்துக்கு பெரும் அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரில் ஈழத்தமிழர்களுக்குக் குந்தகமான சில திட்டங்களை கொண்டு வர முயற்சித்தார். அவற்றின் ஆபத்துகளைச் சுட்டிக்காட்டி வட மாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் உறுதியாக அவற்றை மறுதலித்திருந்தார். இதனால் ஆழ்நிலைத் தரப்புகளின் வில்லங்கம் இரட்டிப்பாகியது.

06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்




# ஜெனிவாவை நோக்கி ஒன்று திரள முடியாத தமிழ்த் தரப்பு?

அரசாங்கம் செம்மணி விவகாரத்தில் நேர்மையாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் விதத்தில் நடந்து கொள்கிறது. கடந்தவாரம் நீதிமன்றம் பொது மக்களை அந்த இடத்துக்கு வந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்களை அடையாளம் காணுமாறு அழைத்திருந்தது. அத்தோடு அந்தப்பிரதேசத்தில் மேலும் புதைகுழிகள் இருக்கலாமா என்பதனை பரிசோதிப்பதற்கு தேவையான ஸ்கானிங் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகளின்மூலம் அரசாங்கம் செம்மணி விவகாரத்தில் தான் விசுவாசமாக நடப்பதாக காட்டிக்கொள்வதோடு உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை மேலும் பலப்படுத்த முயற்சிக்கின்றது. அதாவது வரும் செப்ரெம்பர் மாதம் தொடங்கவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரை நோக்கி அரசாங்கம் உழைக்கிறது என்று பொருள்.

ஓர் அரசுடைய தரப்பு அவ்வாறு ஜெனிவாவை நோக்கி திட்டமிட்டு உழைக்கின்ற ஒரு பின்னணியில் அரசற்ற தரப்பாகிய தமிழர்கள் என்ன செய்கிறார்கள்?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாரித்த கடிதத்தை தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் அந்தக்கடிதம் தமிழரசுக் கட்சியின் கையெழுத்து இல்லாமலேயே போயிருக்கிறது. அதாவது அடுத்த ஜெனிவாக் கூட்டத் தொடரை எதிர்கொள்ளும் விடயத்தில் தமிழ்த் தரப்பு இரண்டாக நிற்கிறது என்று பொருள். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மேற்படி கூட்டுக் கடிதத்துக்கு பதில் அனுப்பியுள்ளார். எனினும் தமிழரசுக் கட்சியின் கையெழுத்து அதில் இல்லை என்பது பலவீனம்தான்.

கடந்த 16 ஆண்டு கால அனுபவத்தின் பின்னரும் குறிப்பாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உள்நாட்டுப் பொறிமுறையை வெளிநாட்டு உதவிகளோடு பலப்படுத்தலாம் என்ற கருத்துத் தெரிவித்திருக்கும் ஒரு பின்னணியில் தமிழ்த் தரப்பு இவ்வாறு ஐ.நா.வை இரண்டாக நின்று அணுகுவது என்பது தோல்விகரமானது. ஏற்கனவே 2015 இல் இருந்து 18 வரையிலும் அவ்வாறுதான் நிலைமை காணப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலைமாறுகாலநீதிக்கான ஐ.நா.வின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்பில் ஒரு பகுதியும் அதனை ஆதரித்தது. அதேசமயம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பில் இன்னொரு பகுதி பரிகாரநீதியைக் கேட்டது.

ஆனால் நிலைமாறுகாலநீதிக்கான பரிசோதனைகளில் ஈடுபட்டோம் அதில் தோல்வி அடைந்து விட்டோம் என்று சுமந்திரன் 2021 ஆம் ஆண்டு வவுனியாவில் நடந்த சந்திப்பில் வைத்துக் கூறினார். அந்தச்சந்திப்பு ஐ.நா.வுக்கு கூட்டுக் கடிதம் எழுதும் நோக்கத்தோடு அப்பொழுது முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது சந்திப்பாகும். அதில் அவர் "ஆறு ஆண்டுகளுக்கு முன் ஒரு பரிசோதனை செய்தோம். அதில் தோல்வி அடைந்து விட்டோம்" என்று சொன்னார். அப்படியென்றால் நிலைமாறுகாலநீதியை ஸ்தாபிப்பதற்காக ஐ.நா.வுடன் இணைந்து செயற்பட்ட தமிழரசுக் கட்சியும் அதன் பங்காளிக் கட்சிகளும் அந்தத் தோல்விக்குப் பொறுப்புக்கூறவேண்டும். ஒரு வகையில் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐ.நா.வுக்கு அனுப்பப்பட்ட கூட்டுக் கடிதம் அவ்வாறு பொறுப்புக் கூற முற்பட்டதன் விளைவுதான் என்று எடுத்துக்கொள்ளலாம்.

அதன் தொடர்ச்சியாக மீண்டும் ஒரு கடிதத்தை நான்கு ஆண்டுகளின் பின் அனுப்புவதற்கு முயற்சித்த பொழுது தமிழரசுக் கட்சி அதில் கையெழுத்திட மறுத்து விட்டது. இரண்டு தரப்பும் ஒரு மேசையில் அமர்ந்திருந்து விவகாரத்தை ஒரு இனமாக அணுகுவதற்கு முடியவில்லை. அது மட்டுமல்ல அவர்களை ஒரு மேசையில் கொண்டு வந்து இருத்த அரங்கில் உள்ள சிவில் சமூகங்களால் முடியவில்லை என்பதையும் அது காட்டுகிறது.

அதேசமயம் நிலைமாறுகாலநீதியை ஆதரித்த தமிழரசுக் கட்சி அந்தப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகத் தெரிவித்ததுபோல இன்னும் சில ஆண்டுகளின் பின், கூட்டுக் கடிதத்தில் கையெழுத்திடாமல் விட்டதை தவறு என்று ஏற்றுக் கொள்ளக்கூடும். ஆனால் இவ்வாறு தொடர்ச்சியாகத் தவறுகளை விடுவதும் அல்லது பொருத்தமற்ற நிகழ்ச்சிநிரலை முன்னெடுப்பதும், பின் அதில் தோல்வி அடைந்து விட்டோம் என்று சில ஆண்டுகளின் பின் கூறுவதும் அரசற்ற தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆபத்தானது. முடிவுகளை எடுக்கும் தலைவர்கள் விடும்



தவறுகளுக்கு தமிழ்மக்கள் தொடர்ந்து விலை கொடுக்க முடியாது. கடந்த 16 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கும் தேக்கத்துக்கும் பின்னடைவுகளுக்கும் இவ்வாறான தவறுகளே காரணம்.

கூட்டுக்கடிதத்தில் கையெழுத்து இடுவதில்லை என்ற முடிவை எடுத்தபின் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசிய சுமந்திரன் தாம் எதிர்காலத்தில் அந்த கடிதத்தை விடவும் அழுத்தமான பலமான விடயங்களை முன்வைத்து ஐ.நா.வுடன் 'என்கேஜ்' பண்ணப் போகின்றோம் என்ற பொருள்பட பேசியிருந்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எழுதியிருக்கும் கடிதத்தை விடவும் பலமான தீர்க்கதரிசனம் மிக்க ஒரு நகர்வாக அது அமையுமா?

ஆனால் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு ஐ.நா.வை அணுகுவது என்ற ஒரு விடயம் தான் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் பலமானது. அந்த விடயத்தில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு ஒத்துழைக்க மறுத்து விட்டது. அதற்கு அவர்கள் கூறும் சில காரணங்கள் சரியாக இருக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் விட முக்கியமானது தமிழ்த் தரப்பு ஒன்றாக நின்று அனைத்துலக சமூகத்தை எதிர்கொள்வது என்பதுதான். அந்த விடயத்தில் தமிழ்த்தரப்பு தொடர்ந்து தோற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் கடந்த வாரம் நிரூபித்திருக்கிறது.

கடிதம் தொடர்பாக புலம்பெயர்ந்த தமிழ் செயற்பாட்டாளர்கள் சிலரும் எதிர்மறையான கருத்துகளைத் தெரிவித்திருந்தார்கள். 2009க்கு முன்பு ராஜதந்திரிகள் மத்தியில் அதிகம் ஆர்வத்துடன் பார்க்கப்பட்ட ஆங்கில இணையத்தளமொன்றின் ஆசிரியர் மேற்படி கூட்டுக் கடிதம் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்திருந்தார். அதுமட்டுமல்ல அந்தக்கடிதத்தில் கையெழுத்திட்ட சில மக்கள் அமைப்புகளும் அந்தக்கடிதம் தமக்கு காட்டப்படவில்லை என்று பகிரங்கமாக கருத்துக் கூறியுள்ளன. யாழ். ஊடக அமையம் உட்பட வேறு சில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் அவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கிறார்கள். மேற்கண்ட செய்திகள் யாவும் நமக்கு உணர்த்துவது எதை என்றால் ஐநாவை நோக்கி ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்பும் விடயத்தில் தமிழ் மக்கள் பெருமைப்படும் விதத்தில் ஒன்றிணைய முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதைத்தான்கூட்டாக கடிதம் எழுதுவதில் மட்டுமல்ல கூட்டாகச் செயற்பட வேண்டிய வேறு பல விடயங்களிலும் தமிழ் மக்கள் ஒன்றாக இல்லை என்பதைத்தான் கடந்த வாரம் கிடைத்த செய்திகள் உணர்த்துகின்றன.

வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கு நீதி கேட்டுப் போராடும் அம்மாமார்களுக்கிடையிலும் மீண்டும் முரண்பாடுகள் பெரிதாகியிருக்கின்றன. கடந்த வாரம் தென்மராட்சியில் நடந்த ஒரு சந்திப்பின் பின் அம்மாமார் தெரிவித்த தகவல்களின்படி அந்த அமைப்புகள் இரண்டுபட்டு நிற்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் மீதும் அவர்களோடு ஒத்துழைக்கும் அம்மாமார் சிலர் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்கும் விடயத்திலும் தமிழ் மக்களால் ஒன்றாகத் திரள முடியவில்லை.

தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் அதுதான் நிலைமை என்று தோன்றுகிறது. தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கனடாவில் தான் தாயகத்துக்கு அடுத்தபடியாக அதிக தொகை தமிழர்கள் வாழ்கிறார்கள். நீதிக்கான போராட்டத்தில் ஒப்பீட்டளவில் உற்சாகமூட்டும் முன்னேற்றங்கள் அங்குதான் ஏற்பட்டன. ஆனால் அங்கே கடந்த வாரம் நடக்கவிருந்த தமிழ்த் தெருவிழா ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட தமிழ் அமைப்புகளுக்கு இடையே ஒருமித்த கருத்து இல்லாமையே காரணம் என்று தெரிகிறது.

அதாவது செம்மணி புதிய வாய்ப்புகளைத் திறந்து வைத்திருக்கும் ஒரு காலகட்டத்தில்கூட தமிழ்த்தரப்பு தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பெருமைப்படத்தக்க விதத்தில் ஒன்றாக இல்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு செம்மணி எதிர்பாராமல் வந்த ஒரு சோதனை. அதே சமயம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அது எதிர்பாராமல் கிடைத்த ஒரு வாய்ப்பு. "செம்மணி மனிதப் புதைகுழி நீதிக்கான பயணத்தில் புதிய கதவுகளை திறந்துவிடும். அது மனிதப்படுகொலை, யுத்தக் குற்றம் இடம்பெற்ற இடம். இராணுவத்தினரே செய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன" என்று மூத்த சட்டத்தரணியும் சட்டச் செயற்பாட்டாளருமான ரட்ணவேல் கூறியுள்ளார். இவ்வாறு எதிர்பாராத விதமாக தனக்குச் சோதனையாக வந்த புதைகுழியை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் புத்திசாலித்தனமாக, நிதானமாகக் கையாண்டு வருகிறது. ஆனால் தமிழ்த் தரப்போ அந்த விடயத்தை ஒன்றுதிரண்டு கையாள முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)

# தேய்கிறதா வடக்கு?

## க.பொ.த.(சா/த) முடிவுகளை முன்வைத்து ஓர் அலசல்





ஓ கு.பிரதீபன்

*விரிவுரையாளர், கல்வியியல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

### மாணவரும் இடைவிலகலும்

தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரையிலான மாணவர் இடைவிலகல் அளவு அனைத்து மாகாணங்களிலும் சமனாக அமைந்திருக்கின்றதா? என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். தரம் பதினொன்றுக்கு முன்பதாக கற்றலில் விளிம்பு நிலை அல்லது பின்னடைவான மாணவர்கள் அதிகம் இடைவிலகுகின்ற போது அந்த மாகாணங்களின் க.பொ.த உயர்தரத்திற்கு சித்திபெறும் சதவீதம் உயர்வாக இருப்பதற்கான சந்தர்ப்பம் உண்டு. ஆகவே இடைவிலகல் ஒப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுவது அவசியமானதாக அமைகின்றது.

### ஒப்பீட்டு முறைமை பொருத்தமானதா?

கல்வி பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் முன்னைய காலங்களில் மாணவரொருவர் தோற்றுகின்ற பிரதான பாடங்களில் அந்த மாணவர் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் வெட்டுப்புள்ளி தீர்மானிக்கப்பட்டு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது. எனினும் பாடங்களிடையேயான கடினத் தன்மையிலுள்ள வேறுபாடு, வினாத்தாள்கள் இடையிலான கடினச்சுட்டி வேறுபாடு, மற்றும் புள்ளியிடலிலுள்ள அகவயத்தன்மையின் காரணமான வேறுபாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மாணவர்களை வரிசைப்படுத்தலே நியாயமானது என்ற அடிப்படையில் 'Z' புள்ளி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு அதனடிப்படையில் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும் நடைமுறை கொண்டுவரப்பட்டது. இங்கு காணப்பட்ட அதே முரண் நிலையானது, கல்வி பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை அடைவு சதவீதத்தின் அடிப்படையில் மாகாணங்களைத் தரவரிசைப்படுத்தி ஒப்பீடு செய்யும் முறைமையிலும் காணப்படுகின்றமை உற்று நோக்கத்தக்கது. ஆகவே இவ்வாறான ஒப்பீட்டு முறைமையும் அதனடிப்படையில் அடைவினை வியாக்கியானம் செய்தலும் தவறான ஒரு நடைமுறையாகும்.

எனவே பன்மைத்துவத்தின் உரிமைகள் பெரிதும் அங்கீகரிக்கப்படாத இலங்கை போன்ற பன்மைத்துவக் கலாசார நாடொன்றில், ஒட்டுமொத்தமாக அனைத்து பாடங்களினுடைய அடைவு சதவீதத்தின் அடிப்படையில் மாகாணங்களை தரவரிசைப்படுத்தி நோக்குதற்குப் பதிலாக தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழி மூலமான மாணவர்களுக்கும் பொதுவானதாக அமைகின்ற வினாத்தாள்களைக் கொண்டிருக்கின்றதும், சிங்கள மொழிச் சொற்களின் ஆதிக்கம் பெருமளவில் காணப்படாததுமான கணிதம், விஞ்ஞானம், மற்றும் ஆங்கிலம் போன்ற பிரதான பாடங்களினுடைய அடைவு சதவீதத்தின் அடிப்படையில் மாகாணங்களைத் தரவரிசைப்படுத்துதலும் அதனடிப்படையில் மாகாண அடைவினை வியாக்கியானம் செய்தலும் ஓரளவுக்கு ஏற்கத்தக்கதாக அமையும்.

### மீண்டெழுவதற்கான உத்தி யாது?

அடுத்து மாகாண அடைவினை எதிர்பார்க்கப்பட்ட இலக்குடன் ஒப்பிட்டு வியாக்கியானம் செய்தல் எனும் முறைமையை நோக்கும் போது, இரு கேள்விகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று, எதிர்பார்க்கப்பட்ட இலக்கு என்றால் என்ன? மற்றையது, அவ் இலக்கினை எவ்வாறு நிர்ணயிப்பது?

இங்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்கு என்பது, தொடர்ந்து வரும் ஆண்டில் நடைபெறவுள்ள க.பொ.த (சா/தர) பரீட்சையில் மாகாணம் அடைந்து கொள்ள உத்தேசித்துள்ள இலக்கு என வரையறுக்கப்படலாம். இது பாடரீதியான அடைவாக, உயர்தரத்துக்கு தகுதி பெறும் மாணவர் சதவீதம் சார் அடைவாக, அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை நிலைச் சதவீதம் சார் அடைவாக என பல்வேறு வழிகளில் குறிப்பிடப்படலாம். உதாரணமாக விஞ்ஞான பாடத்தின் சித்திவீதத்தினை 72 %ஆக்குதல். உயர்தரத்திற்கு தகுதி பெறும் மாணவர் சதவீதத்தை 70% ஆக்குதல். அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை நிலையை 0.5 சதவீதமாகக் குறைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அடுத்து எவ்வாறு இந்த இலக்கினைத் தீர்மானிப்பது? இந்த இலக்கினைத் தீர்மானிப்பதற்கான சான்றாதாரமாக அமையக்கூடிய தரவுகள் எவை? என்பது தொடர்பில் சிந்தித்தால், பொதுவாகக் கடந்தகால பெறுபேறே இதற்கான சான்றாதாரமாகக் கொள்ளப்படும் வழமை காணப்படுகின்றது. இந்நிலைமை ஆசிரியர் மட்டத்திலிருந்து, ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பினூடாக வெளிப்படுத்தப்பட்டு, வலய மட்டம் மற்றும் மாகாண மட்டம் வரை தொடர்கின்றது. இம்முறைமையை ஒரு சரியான முறைமையாகக் கொள்ள முடியுமா? மாணவர் பல்வகைமை எண்ணக்கரு, மாணவர் பல்வகைமையினைக் கருத்திற்கொண்டு கற்பித்தல் எண்ணக்கரு ஆகியவற்றை வலியுறுத்துகின்ற அதே கல்விசார் ஆளணியினர் இவ்விடயத்தில் அதனை மறந்துபோவது வேடிக்கைக்குரியது. கடந்த ஆண்டு கற்ற மாணவர்களின் அடிப்படையில் இவ் வருடத்தில் கற்கின்ற மாணவர்களின் அடைவை எதிர்வுகூற முடியுமா? கடந்த வருடம் கற்ற மாணவர்களின் விருப்பங்கள், ஆர்வங்கள், தேவைகள், ஆற்றல்கள், மற்றும் இயலுமைகள் என்பன இவ் வருடம் கற்கின்ற மாணவர்களினின்றும் வேறுபட்டதல்லவா? அதே போன்று கடந்த வருடம் கற்ற மாணவர்கள் எதிர்கொண்ட அதே உள்ளடக்கத் தகுதியுடைய மற்றும் கடினத்தன்மையுடைய பரீட்சை வினாத்தாளை, இவர்கள் ஒருபோதும் எதிர்கொள்ள முடியாதல்லவா? இந்நிலையில் எவ்வாறு, கடந்த வருட மாணவர்களின் அடைவினை சான்றாதாரமாகக்கொண்டு இவ்வருடத்திற்கான உத்தேச இலக்கினைத் தீர்மானிக்கமுடியும்.

எனவே இதற்கான மாற்று வழியொன்று தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வருடம் தோற்றப்போகும் மாணவர்களின் தரவுகளின் அடிப்படையில் அம்மாணவர்களின் அடைவு தொடர்பான உத்தேச இலக்கினைத் தீர்மானித்தலே அம்மாற்றுவழியாகும்.

### மாற்றுவழிக்கான நடவடிக்கை என்ன?

பாடசாலை ரீதியாக, குறிப்பாக ஒவ்வொரு பாடரீதியாக இவ் இலக்கு முதலில் தீர்மானிக்கப்படவேண்டும். இந்த இலக்கு உரிய சான்றாதாரங்களின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் ஆசிரியர், அதிபர் ஒத்தியைபின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படவேண்டும்.

இங்கு உரிய சான்றாதாரங்களின் அடிப்படையில் நியாயப்படுத்தல் என்பது, உதாரணமாக, 25 மாணவர்கள் கொண்ட தரம் 11 வகுப்பறையொன்றில்,

1. எழுத்துத்தெரியாத மாணவர்கள்: நான்கு
2. முறையாக எழுதத் தெரியாத மாணவர்கள்: மூன்று
3. எழுத வாசிக்கத் தெரிந்த ஆனால் அடிப்படைக் கணிதச் செய்கைகள் தெரியாத மாணவர்கள்: இரண்டு
4. எழுத வாசிக்கத் தெரிந்த ஆனால் 20% இலும் குறைந்த வரவு கொண்ட மாணவர்கள்: இரண்டு

ஆகவே, இந்த வகுப்புக்கு விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கின்ற ஓர் ஆசிரியர், தனது உத்தேச இலக்கினை 56% (14/25) ஆகக் குறிப்பிடுவார். ஆனால் கணிதபாட ஆசிரியருடன் இணைந்து, அடிப்படைக் கணிதச்செய்கைகள் தெரியாத இரண்டு மாணவர்களுக்குரிய அடிப்படைக் கணிதச் செய்கைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற தேர்ச்சிநிலையை அடையச்செய்வதற்கான உத்திகளை முறையாக வகுத்து அதனை அமுல்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை குறித்த தரத்துக்கான இணைப்பாளர் மேற்கொள்கின்ற போது, விஞ்ஞான ஆசிரியர் தனது உத்தேச இலக்கினை 64% (16/25) ஆக மாற்றியமைக்கமுடியும்.

அதேபோன்று வரவு குறைந்த மாணவர்களின் வரவை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை பாடசாலை முகாமைத்துவ குழு மேற்கொண்டு அந் நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த விஞ்ஞான ஆசிரியர் திருப்தி அடைவாராயின் அவர் தனது உத்தேச இலக்கினை 72% (18/25) ஆக மாற்றியமைக்கமுடியும். இந் நடவடிக்கைகள் யாவும் தரம் 11 இல் தான் மேற்கொள்ளப்படுமாயின் குறித்த பாடசாலையின் குறித்த ஆண்டுக்கான விஞ்ஞானபாட அடைவினை ஒருபோதும் 72% இற்கு மேல் அதிகரிக்கமுடியாது. ஆனால் அப்பாடசாலையின் கடந்த வருட அடைவு 80 % ஆக அல்லது அதனிலும் உயர்வாகக் கூட இருக்கலாம். இதுவே சான்றாதாரங்களின் அடிப்படையில் இலக்கினை நிர்ணயித்தல் எனப்படுகின்றது. மிக உயர்ந்த இலக்கு ஒன்றினை உத்தேச இலக்காக நிர்ணயிக்கவேண்டுமாயின், அல்லது வருடாந்தம் உத்தேச இலக்கினை அதிகரித்துச் செல்லவேண்டுமாயின், இத்தகைய சான்றாதாரங்களின் அடிப்படையிலான நடவடிக்கைகள் அதற்கு முன்னைய தரங்களிலேயே, உதாரணமாக, தரம் 6 தொடக்கம் 10 வரையான தரங்களில் மேற்கொள்ளப்படவேண்டும். பாடசாலைகளின் பாடரீதியான உத்தேச இலக்குகளைத் தீர்மானிப்பதில் குறித்தபாடசாலை அமைந்துள்ள வலயத்தின் பாடப் பணிப்பாளர், மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் வகிபங்கு அவசியமானது. இவர்களினதும், அதிபர் மற்றும் குறித்த பாட ஆசிரியர்களினதும் கூட்டுப்பொறுப்பு மற்றும் ஒத்தியைபு என்பன இந்தப்பணியை நிறைவேற்றுவதற்கு மிகவும் அவசியமானதாகும்.

பின்பு இவ்வாறான பாடரீதியான உத்தேச இலக்குகளின் அடிப்படையில் பாடசாலைக்கான உத்தேச இலக்கு தீர்மானிக்கப்பட வேண்டும். இதன்போது, உயர்தரத்திற்குத் தகுதி பெறுதலிற்கான விளிம்பு நிலை மாணவர்கள் இனங்காணப்பட்டு, அந்நிலையிலிருந்து மீள்வதற்கு, அவர்களிற்குப் பொருத்தமான பாடம் அல்லது பாடங்கள் இனங்காணப்பட்டு, அப்பாடங்களினுடைய உத்தேச இலக்கு மீளமைக்கப்படவேண்டியது அவசியமாகும். இப்பணியில் குறித்த வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர், மற்றும் ஆசிரியர்களின் கூட்டுப் பொறுப்பு மற்றும் ஒத்தியைபு அவசியமாகும்.

வலய ஆளணியினரின் பங்களிப்புடன் பாடசாலை மட்டத்தில் இவ் உத்தேச இலக்குகள் முறையாகத் தீர்மானிக்கப்படுமாயின் அதனடிப்படையில் இலகுவாக வலய மற்றும் மாகாணத்தின் உத்தேச இலக்குகள் பாடரீதியாகவும், ஒட்டுமொத்தமாகவும் தீர்மானிக்கப்பட முடியும்.

### விமர்சனங்களை எவ்வாறு வெற்றிகொள்ள முடியும்?

இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் பொது வெளியில் உரிய நியாயப்படுத்தலுடன் பகிரப்பட்டு, பரீட்சைப்பெறுபேறுகளின் பின்னர் அந்த இலக்குகள் அடையப்பட்டுள்ளமை தொடர்பில் உரிய வகையிலான வெளிப்படுத்தல்களை உரிய தரப்பினர் மேற்கொள்கின்றபோது இவ்வாறான விமர்சனங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அத்துடன் இவ்வாறு சான்றாதாரங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்ற இலக்குகள் அடையக் கூடியனவாக அமைந்து, அவை அடையப்படுகின்ற போது, அது ஆசிரியர் மற்றும் கல்விசார் ஆளணியினரிடையே உள்ளார்ந்த ஊக்கலை ஏற்படுத்தும் வலுவுடையது என்பதால், மாகாணத்தினுடைய தொடர்ச்சியான பெறுபேற்று அடைவின் அதிகரிப்பிற்கும் அதன் விளைவாக மாகாணத்தின் கல்வி அடைவின் மேம்பாட்டுக்கும் வழியமைக்கின்ற ஒரு கருவியாகத் தொழிற்படும் ஆற்றலுடையதாக அமையும்.

### முடிவுரை


எனவே க. பொ. த (சா/ தர) பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில், தனியே சித்தி சதவீதத்தை மாத்திரம் குறிகாட்டியாகக் கொண்டு, அதனடிப்படையில் மாகாணங்களைத் தரவரிசைப்படுத்தி நோக்குதலும், இந்தத் தரவரிசையின் அடிப்படையில் மாகாணத்தின் பெறுபேற்று அடைவினை வியாக்கியானம் செய்தலும், அதனை மாகாணத்தின் கல்விசார் அடைவிற்கான ஒரு முழுமையான குறிகாட்டியாகக் கொள்தலும் முற்றிலும் தவறானதாகும்.

**இதற்கு மாற்றீடாக உத்தேச இலக்கினைத் தீர்மானித்து, அதன் அடைவின் அடிப்படையில் பெறுபேற்று அடைவினை வியாக்கியானம் செய்யும் மாற்று முறைமை தொடர்பில் சிந்திக்க வேண்டியது அவசியமானதாகும்.** ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்



## நடையைக் கட்டும் சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை குறைப்பது என்ற அரசின் முடிவைத் தொடர்ந்து இது தொடர்பில் என்ன செய்வது என்று மஹிந்தவும் சந்திரிகாவும் கூடிப் பேசியுள்ளனராம். இறுதியில் தனது உத்தியோகபூர்வ இல்லத்தைக் காலி செய்வதென்று சந்திரிகா முடிவெடுத்துள்ளார்.

தனது தாய் வீடான கொழும்பு 7 ,ரோஸ்மிட் பிளசில் அமைந்துள்ள வீட்டுக்குப் போய் 'செட்டிலாவதென' முடிவெடுத்த அம்மணியின் அக்காவோ அதற்கு இடம் கொடுக்கவில்லை.

அந்த வீடு இருப்பது அம்மணியின் அக்கா சுனேத்ராவின் பெயரில். அவர் அந்த வீட்டில் ஹோட்டல் நடத்தி வருவதால் சந்திரிகா தங்க முடியாது என்று கையை விரித்துள்ளாராம்.

இதனால் கொறொகொல்லவில் உள்ள வீட்டில் தங்குவது என்று இறுதி முடிவெடுத்து இப்போது பெட்டி படுக்கையெல்லாம் சந்திரிகா அங்கே அள்ளுகிறார் என்று தகவல்.

## இதுதான் மஹிந்தவின் 'பிளான்'

சந்திரிகா தன் இருப்பிடத்தை கொரகொல்லைக்கு மாற்ற முடிவெடுத்ததைப் போல, மஹிந்தவால் முடிவெடுக்கமுடியவில்லை என்று கூறுகிறார்கள்.

வீட்டை காலிசெய்து கொழும்பிலேயே வாடகைக்கு பாதுகாப்பான வீடு ஒன்றைத் தேடுமாறும் அதற்கான வாடகையை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்றும் மஹிந்தவின் நண்பர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

மஹிந்தவுக்கோ அதில் விருப்பமில்லை. தன்னை வெளியேற்றுவதற்கு வழங்கும் கடைசி சந்தர்ப்பம் வரை வீட்டில் இருப்பதென்றும், கடைசியாக தனது ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் முன்னிலையில் பெரும் பரபரப்போடு வெளியேறி, அவரது தங்காலை கால்டன் இல்லத்துக்குச் செல்வதென்றும் முடிவெடுத்திருக்கிறாராம். இதன் மூலம் இழந்துபோன செல்வாக்கை கொஞ்சமாவது மீட்க முடியுமென அவர் நம்புகிறாராம்.

2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தபோதும் இப்படித்தான் அலரிமாளிகையில் இருந்து வெளியேறி கால்டன் இல்லத்துக்குச் சென்றார் மஹிந்த . அதே ஸ்டைலில்தான் இப்போதும் செல்லவுள்ளராம். நல்ல பிளான் தான்.







## எயார்போர்டில் குண்டோ...?

தனது நண்பர் ஒருவரின் திருமணம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக சில நாட்களுக்கு முன் மாலைதீவுக்குச் சென்றிருக்கிறார் நாமல் .

அதற்காக அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை அடையும்போது விமான நிலையத்தில் கடும் பாதுகாப்பாம்.

அங்கே நின்ற பாதுகாப்பு ஊழியர் ஒருவரை அணுகி.." என்ன ..கடும் பாதுகாப்பா இருக்கு..குண்டு ஏதும் சிக்கிட்டோ? " என்று கேட்டிருக்கிறார் நாமல்.

" அப்படி ஒன்றுமில்லை சேர்.ஜனாதிபதி அநுர வெளிநாடு போறார்.அதான் கடும் பாதுகாப்பு " என்றார் அந்த ஊழியர்.

" என்னடாப்பா ..பாதுகாப்பே வேணாம் என்று சொன்னார் ஜனாதிபதி.இப்ப இப்படி பாதுகாப்பு? " என்று மறுபடியும் கேட்டார் நாமல்.

அந்த பாதுகாப்பு ஊழியரோ அதைக் கேட்டு சிரிக்கத் தொடங்கினாராம். பதிலுக்கு நாமலும் சிரித்துவிட்டு விமானம் ஏறினாராம்.

## விஸ்கியால் வந்த வினை

ஜனாதிபதி அநுர, சில நாட்களுக்கு முன் மாலைதீவுக்குச் சென்றார் அல்லவா. அவர் போகும்போது விமானம் வரை சென்று வழியனுப்பி வைக்கச் சென்றனர் அவரின் பாதுகாப்பு ஊழியர்கள்.

அவரை விமானத்தில் ஏற்றிவிட்டு வரும்போது விமான நிலைய ' டியூட்டி ப்ரீ ' கடைகளில் பெறுமதியான பொருட்கள் பலவற்றை வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்தப் பெறுமதியான பொருட்கள் என்னவென்று தெரியுமா? வேறென்ன, விஸ்கி போத்தல்கள் தான்.

வெளியே நல்ல விலையில் விற்கலாம் அல்லவா.அதற்காகத்தான் வாங்கினார்களாம். இந்தத் தகவல் வஜிர அபயவர்த்தனவின் காதுகளில் விழ, அதை அப்படியே ரணிலிடம் ஒப்புவித்திருக்கிறார். அதன் பின்னர் தான் இதனை அப்படியே விட்டால், அரசாங்கத்துக்கு கெட்டபெயர் வந்துவிடுமென்று, அந்தப் பாதுகாப்பு உத்தியோக்கத்தர்களை பதவியில் இருந்து நீக்கியிருக்கிறது அரசாங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ப்திணம்

○ இராகவன்

பாகம் 3

மனோன்மணி 'புது எழுத்து' வெளியீடாகக் கொண்டுவந்திருந்த எனது சிறுகதைத்தொகுப்பான, "கலாவல்லி முதலான கதைகள்" பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்கான கதையாக அமைந்து விட்டிருந்தது. நான் தேர்ந்தெடுத்த "வண்ணத்துப்பூச்சிகள் கொண்டு செல்லும் இதிகாசநகரம்" எனும் தலைப்பைப் பயன்படுத்தி அச்சிட்ட அட்டைப்படம் கறுப்பு வெள்ளையாகவிருந்தபோதும் வெகுசிறப்பாக இருந்தது. அதைப் பயன்படுத்தாமல் அழுது வடியும் மென்பச்சை வண்ணத்தில், "கலாவல்லி முதலான கதைகள்" என்ற தலைப்புடன் வெளிவந்திருந்த அந்தப் புத்தகத்தைப் பார்த்ததும் முதலில் ஏமாற்றமும் கவலையுமடைந்தேன். ' ம்.. பரவாயில்லை இந்தளவிலாவது புத்தகமாக வெளிவ்ந்திருக்கின்றதே' என மனதைத் தேற்றிக்கொண்டு புத்தகத்தைத் திறந்து வாசித்தால் இன்னுங் கவலையாகிப் போனது. அடிப்படையான ஒப்புநோக்குதல் கூடச்செய்யாமல் எண்ணற்ற எழுத்துப்பிழைகளோடு அச்சிடப்பட்டிருப்பதைக் கண்டு மனம் வெறுத்துப்போனேன். அது காலப்போக்கில் ஒரு கசப்பான அனுபவமாக எனக்கு அமைந்துவிட்டது. இன்றைக்கும் எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பென , "கலாவல்லி முதலான கதைகள்" என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வதில் எனக்கொரு பெருந்தயக்கமிருக்கத்தான் செய்கிறது.

'ம்..... அதெல்லாம் போகட்டும் இப்ப விசயத்துக்கு வருவம்'. அண்டைக்கு ராதா மாமா நிதி திரட்டவந்த பொடியளுக்குச் சொன்ன விசயம் எந்தளவுக்கு உண்மையெண்டதைக் காலப்போக்கில நாங்கள் நிதர்சனமாக உணரக்கூடியதாகவிருந்தது. அவர் சொன்னது அப்ப அந்தப் பொடியளுக்குக் கசப்பாகவும் ஏற்றுக்கொள்ளமுடியாமலுமிருந்திருக்கும். அவர்கள் ராதா மாமாவை ஒரு தேசத்துரோகி எண்டு கருதியிருப்பாங்கள். சிலவேளை அவரை மண்டையிலும் போடவும் பிளான் போட்டிருப்பாங்கள். ஆனால் ராதா மாமா வேளைக்கே போய்ச்சேந்திட்டார். அவரைப்போல ஒரு போகியை நான் என்ர வாழ்நாள்களில இதுவரைக்கும் காணேல்ல. எங்கடையூரில சொந்தமாக் கார் வைச்சிருந்த ஒரேயாள் அவர்தான். அதுக்கும் இரண்டு ட்றைவர்மாரை வைச்சிருந்தவர். ஒரு ட்றைவர் காரில குளிக்கப்போறதுக்கு. மற்ற ட்றைவர் மாக்கெற், கடை, கண்ணியள், கொழும்புக் கெண்டு வெளியோட்டத்துக்கு. உங்களுக்குச் சிலவேளை இப்ப ஒரு கேள்வி வந்திருக்கும். குளிக்கப்போறதுக்கு ஏன் ட்றைவர்? பெரிய காசுக்காறன் எண்டால் வீட்டில் கிணறு பாத்றூம் ஒண்டுமில்லையோ? எண்டு இயல்பாகவே அந்தக் கேள்வி வரத்தான் செய்யும். வீட்டில கிணறுமிருக்கு. பாத்றூமுமிருக்கு. ஆனால் ராதா மாமா அதைப் பாவிக்கிறேல்ல.

40

செனிற்றரி சண்முகம்பிள்ளை ஒரு டீசன்ற் டிசிப்பிளினான ஆள் எண்டு ஊருக்குள்ள கதைப்பினம். அப்பிடிக்கொத்த ஆளின்ரை மூத்தமருமகனான ராதா மாமா நல்லாத் தண்ணியடிப்பார். தண்ணியடிப்பார் எண்டு சொல்லுறதைவிடத் தண்ணியில மிதப்பார் எண்டு சொல்லுறதுதான் சரியாயிருக்கும். மற்றது அந்தாளுக்கு ஒவ்வொருநாளும் இறைச்சிவேணும். இதுக்காகவே அவர் சிமெந்தில அரைச்சுவர் வைச்சு மேலுக்கு நெற் அடிச்சு ஒரு கோழிக்கூடு செற் பண்ணி வைச்சிருந்தவர்.

அதுக்குள்ள எப்பவும் சேவல்கள் நிறைஞ்சிருக்கும். அவர் அநேகமா எங்கடை வீட்டை வந்துதான் சேவல் வாங்குவார். மற்றது போறவாற இடங்களில சேவல் கிடைச்சால் விலையைப் பற்றிக் கவலைப்படாமல் வாங்கியந்து கூட்டுக்குள்ள விட்டுடுவார். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு சேவலாச் சட்டிக்கை போகும்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# அமெரிக்கப்...

திரைமறைவில் இரகசியமாகச் சில காய்நகர்த்தல்களை அவை மேற்கொண்டன. விளைவாக, இன அழிப்புக்கான சர்வதேச நீதிகோரும் தீர்மானத்தை நிறைவேற்றிய நீதியரசர் விக்னேஸ்வரன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது நோக்கி இவர்களின் கூட்டு நகர்வு 2017 ஆம் ஆண்டில் வெளிப்பட்டது. இதன் விளைவாக மிகுந்த நெருக்கடியான சூழல் ஏற்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் ஓர் இளைஞர்படை முதலமைச்சருக்கு ஆதரவாகத் திரண்டதும், மக்கள் மத்தியில் உருவாகிய கருத்துருவாக்கத்தின் விளைவாக அவருக்கு எதிரான சதி நடவடிக்கை முறியடிக்கப்பட்டதும் பலருக்கு நினைவிருக்கலாம்.

இந்தப் பின்னணியில் 2025 இல் நடக்கவிருப்பது என்ன?

இமயமலைப் பிரகடனத்தை ஒத்த செயற்பாடுகளுக்கு மீண்டும் களம் அமைக்கப்படுகிறது போல் தெரிகிறது.

குறிப்பாக ஜேர்மனியைத் தளமாகக் கொண்டு இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று புலம்பெயர் ஈழத்தமிழர்களை வளைத்துப் போட்டுத் தமிழ்த் தேசியத்தை அங்கீகரிப்பது போல அதை நீர்த்துப்போகச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது.

அதில் நீண்டநாட்களாக பணிபுரியும் தமிழ்ப் பெண் ஆய்வாளர் ஒருவரும் இன்னொருவருமாகச் சேர்ந்து Tradition & FaithOriented Insider Mediators (TFIMs) என்ற ஆய்வை 2016 ஆம் ஆண்டில் மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆய்வில் இலங்கை தொடர்பாக எதுவும் பேசப்படவில்லை. மியான்மர், தெற்கு தாய்லாந்து, லெபனான், கொலம்பியா, கென்யா, மாலி ஆகிய இடங்களில் மத நிறுவனங்களை எவ்வாறு அமைதிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம் என்பதற்கான தரவுகளையும் முன்னோடிப் பரிசோதனைகளையும் அடிப்படையாகக் கொண்டு குறித்த கருத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

இந்த TFIM கருத்திட்டமே இலங்கை தொடர்பான இமயமலைப் பிரகடனமாக 2023 இல் வெளிப்பட்டுள்ளது. இதில் ஜேர்மனியின் அந்த அரச சார்பற்ற நிறுவனம் பின்னணியாக இருந்தது.

காரணம் என்னவெனில், ஏற்கனவே பௌத்த தீவிரவாத தரப்புகளுக்கு குறித்த நிறுவனம் மீது கடுமையான ஐயம் இருந்தமையே. அதுமட்டுமல்ல, குறித்த நிறுவனம் கொழும்பில் இயங்கத் தடைவிதிக்கப்பட்டு ஒருகாலத்தில் ராஜபக்ச அரசினால் வெளியேற்றப்பட்டும் இருந்தது.

இந்தப் பின்னணிகளை அறிந்து தமிழ்த் தேசியத் தரப்புகள் விழிப்படைந்து அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொண்டு விடலாம் என்றும், இதற்கு விளங்கியோ விளங்காமலோ சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படக் கூடும் என்று தெரிந்தும், கொழும்பில் உள்ள சில தூதரகங்களின் மூலம் வேறு சில அணுகுமுறைகள் கடந்த சில வாரங்களாக நகர்த்தப்படுகின்றன. அதாவது இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை என்ற கோரிக்கையை நீக்கம் செய்து அநுர அரசாங்கத்தை ஆதரித்து அல்லது நம்பிக்கை வைத்து செயற்படக்கூடிய அணுகுமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

அநுர அரசாங்கத்தின் மீது ஜெனிவா மனித உரிமைகள் பேரவை நம்பிக்கை வைத்து எதிர்வரும் ஒக்ரோபர் மாத அமர்வில் முழுமையான எழுத்துமூல அறிக்கையிடலில் தமிழ்த்தரப்பின் கோரிக்கைகள் புறம் தள்ளப்படும் வாய்ப்புகள் உண்டு.

உள்ளகப் பொறிமுறை, போர்க்குற்ற விசாரணை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விவசாரணை என்ற அழுத்தங்களுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற அறிவிப்பு ஆணையாளரின் எழுத்து மூல அறிக்கையில் வெளிவரும் வாய்ப்புகள் உண்டு.

ஜேர்மன் மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளின் தூதரக மற்றும் அந்த நாடுகளை மையப்படுத்திய சில அரச சார்பற்ற நிறுவனங்களின் கடந்த சில நாட்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நகர்வுகளை அவதானித்தால், ஆணையாளரின் அறிக்கை எவ்வாறு அமையும் என்பது புரிகிறது.

ஆகவே, 2015 இல் நடந்த அதே கதை மீண்டும் அரங்கேறும் 2025 ஆம் ஆண்டுச் சூழலில் மேற்கின் ஆழ்நிலைத் தரப்புகள் பற்றி ஈழத்தமிழர்களின் கவனம் இருக்கவேண்டும்.

சீனா பக்கம் இலங்கை போனால் அமெரிக்கா ஈழத்தமிழர் பக்கம் வரும் என்று கணக்குப் போடுவதிலும், அல்லது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்படும் புவிசார் அரசியல் போட்டியில் ஈழத்தமிழர் விடயத்தை இந்தியா கையில் எடுக்கும் என்று கணக்குப் போடுவதும், கனவுக் கோட்டைகளைக் கட்டுவதும் அடிப்படையில் தவறானது.

அகமது ஹுசைன் அல்சாரா எனும் பயங்கரவாத அல்கைடா அமைப்போடு தொடர்புபட்ட பிரபல ஜிகாதியாக அறியப்பட்ட அல்ஜுலானி என்பவரின் தலைக்கு பத்து மில்லியன் டொலர் தரப்படும் என சில வருடங்களுக்கு முன் அறிவித்திருந்தது அமெரிக்கா. தற்போது, அப்படியான பயங்கரவாத ஜிகாதியோடு அதே அமெரிக்கா கைகோர்த்து சிரியாவில் ஆட்சிமாற்றத்தை கொண்டுவருகிறது.

**சீனாவின் பிரமாண்டமான புவிசார் அபிவிருத்தித் திட்டமான 'பட்டுப்பாதை' முன்னெடுப்பு மத்திய கிழக்கில் முடக்கப்பட, பயங்கரவாதிகளோடு கைகுலுக்குகிறது அமெரிக்கா. இவ்வாறு மத்திய கிழக்கில் பயங்கரவாதிகளோடு கூட்டுவைத்து ஆட்சி மாற்றம் செய்யும் அமெரிக்காவுக்கு இலங்கையில் ஜே.வி.பியோடு கூட்டுவைப்ப தோன்றும் வில்லங்கமான விடயமே அல்ல.**

(சென்றவாரத் தொடர்ச்சி)

# மாலினி பொன்சேகா

## இலங்கை சினிமாவின் ராணி (1947 - 2025)

ஆதிரன்

3

இன்று சென்னை என்றழைக்கப்படும் அன்றைய மெட்ராசுக்கு செல்லும் வேளைகளிலெல்லாம் சிவாஜிகணேசன் இல்லத்திற்குச் சமுகந்தர மாலினி பொன்சேகா தவறுவதேயில்லை. அக்காலகட்டத்தில் மாலினி பொன்சேகா நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு வழங்கியிருந்த நேர்காணலொன்றில் "சிவாஜிகணேசன் தனது மனைவி, பிள்ளைகளை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்கள் என்னை இரவு விருந்துக்கு தங்களுடைய வீட்டிற்கு வருமாறு அழைத்திருந்தனர். சிவாஜிகணேசனுடன் இணைந்து நடித்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி. அவருடன் நடிப்பது எனக்கு ஒரு கௌரவமாகும்" எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும் அப்போது நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியாளராக இருந்த பி.கே.பாலச்சந்திரன் "திரைப்படத் தயாரிப்பாளராக மாறும்படி என்னை சிவாஜிகணேசன் ஊக்குவித்தார். மாலினி! நீங்கள் முதல்தரமான இலங்கைத் திரைப்படமொன்றைத் தயாரித்துத் தரவேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார்" என மாலினி பொன்சேகா அந்நேர்காணலில் மேலும் குறிப்பிட்டதாகப் பதிவுசெய்துள்ளார். இதற்கமைவாக மாலினி பொன்சேகா திரைப்படத்தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் களமிறங்கினார். 1984 காலப்பகுதியில் மாலினி பொன்சேகா, "சசர செதன" என்ற திரைப்படத்தை முதன் முதலில் தயாரித்து நடித்திருந்தார். அத்துடன் அத்திரைப்படத்தை மெட்ராசுக்கு எடுத்துவந்து சிவாஜிகணேசன் குடும்பத்துக்கு மாலினி பொன்சேகா பிரத்தியேகமாகத் திரையிட்டுக் காட்டியதாக சர்வதேச ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மாலினி பொன்சேகா தொடர்ந்தும் "அஹிம்சா" (1987) என்ற திரைப்படத்தையும் தயாரித்து இயக்கி நடித்திருந்தார். இதைத்தவிர "ஸ்திரீ" (1991) "சந்தமடல" (1991) ஆகிய திரைப்படங்களை இயக்கி நடித்திருந்தார். இதில் "சந்தமடல" திரைப்படத்துக்கான திரைக்கதை வசனத்தையும் மாலினி பொன்சேகாவே எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



திரைக்கலைக்கான சர்வதேசக் கத்தோலிக்க தொடர்பாடல் அமைப்பின் விருது (ICOC International Catholic Communications Organization for Cinema), விஷ்வபிரசாதினி விருது, ஜனாபிமானி விருது, மிகப்பிரபலமான நடிகை விருது, ஜனாதிபதி விருது, சரசவி விருது, சிறந்த நடிகைக்கான சுமதி விருது எனப் பல விருதுகளைப் பெற்றிருந்த மாலினி பொன்சேகாவும் காமினி பொன்சேகா, விஜேகுமாரதுங்க, ரவீந்திர ரன்தெனிய, சனத்குணதிலக, கீதாகுமாரசிங்க, உபேக்சா சுவர்ணமாலி ஆகிய அரசியலில் குதித்த சிங்கள திரைநட்சத்திரங்கள் வரிசையில் இணைந்துகொண்டு ஒரு குறுகிய கால அரசியலில் ஈடுபட்டிருந்தார். 2010 தொடங்கி 2015 வரை அவர் சிறிலங்காவின் நாடாளுமன்றத்திற்குத் தேசியப்பட்டியலில் தெரிவான ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்திருந்தார். அவர் எப்போதுமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளராக இருந்துவந்தார். இலங்கையில் நீண்ட நெடுங்காலமாக நடைபெற்றுவந்த உள்நாட்டுப் போரானது 2009 மே மாதம் முடிவுக்கு வந்திருந்தது. போரில் பெருவெற்றிபெற்றிருந்த மஹிந்த ராஜபக்ச 2010 இல் நடைபெற்ற அரச அதிபர் தேர்தலில் வெற்றிபெற்று மீளவும் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியானார். அதே வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப்பெரும்பான்மையோடு வெற்றிபெற்றிருந்த நிலையில் எப்போதுமே அக்கட்சியின் ஆதரவாளராக இருந்துவந்த மாலினி பொன்சேகா தேசியப்பட்டியலூடாக மஹிந்த ராஜபக்சவின் நேரடித் தலையீட்டின்மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார்.

சில வருடங்கள் கடந்து இன்னொரு நபரை நியமிக்கும் பொருட்டு மாலினி பொன்சேகா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகவேண்டுமென மஹிந்த ராஜபக்சவின் சகோதரரான பசில் ராஜபக்ச கோரிக்கை விடுத்தார். ஆனால் அக்கோரிக்கையை மஹிந்த ராஜபக்ச அடியோடு நிராகரித்துவிட்டார். இதனால் மாலினி பொன்சேகா தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் நிலைத்தார். எனினும் மஹிந்த ராஜபக்ச தலைமையின்கீழ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக மாலினி பொன்சேகா இருந்ததை அவரது பெரும்பாலான ரசிகர்கள், ஆதரவாளர்கள் விரும்பியிருக்கவில்லை. இதனால் 2010 ஜூன் இருபதாம் திகதி வெளிவந்த சண்டே ரைம்ஸ் (Sunday Times) பத்திரிகையில் மாலினி பொன்சேகா எழுதியிருந்த கட்டுரையில் திரைப்படங்களில் நடித்து எனக்குப் பெரும் புகழும் செல்வமும் இருக்கும்போது எதற்காக அரசியலில் இறங்கினீர்கள் எனப்பலரும் என்னிடங் கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். திரைநட்சத்திரமாக அடைந்த உச்சங்களை ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக ஒருபோதும் அடையமுடியாது என்றும் பெறுவதற்கு எதுவுமில்லை, எனது புகழை இழக்கப்போகிறேன் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். உண்மையில் இரு பிரதான அரசியல் கட்சிகளிலிருந்து அண்மைக் காலமாக எனக்கு அழைப்புகள் வந்தன. ஆனால் நான் இதையெல்லாம் நிராகரித்து விட்டேன். ஆனால் அதிகாரம் இருந்தால் மட்டுமே நான் இன்று அடைந்திருக்கும் அந்தஸ்தைப் பொதுநலனுக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்ற எண்ணம் என்பது மனதில் இருந்து வந்தது. வெறுமனே ஒரு தனிநபராக இருந்துகொண்டு அதைச்செய்வது சிரமம். மாறாக, ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் மூடப்பட்ட பல கதவுகள் திறக்கும். பெருமளவு வாய்ப்புகள் வரும். அவற்றின்மூலம் சேவைகளைச் செய்யக்கூடியதாக இருக்கும். இதுவே அரசியலில் இறங்குவதற்குச் சாதகமான தீர்மானத்தை நான் எடுத்ததற்கான முக்கியமான காரணியாகும்..." என முழு அபத்தமானதும் சிறு பிள்ளைத்தனமானதுமான விளக்கமொன்றை அளித்திருந்தார். எனினும் மாலினி பொன்சேகா ஒரு தனித்துவம் வாய்ந்த கலைத்துவமான பல்பரிமாணங்கொண்ட சிறந்த நடிகையென்பதையும் இலங்கை சினிமாவின் ராணி என்றழைக்க முழுத்தகுதி வாய்ந்தவர் என்பதையும் மறுக்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனந்தி

போரின் கவிதை

23

# சங்கீதா

இடைவிடாத குண்டுவெடிப்புகள்
இரவு முழுவதும் ஓயாத சத்தங்கள்..
பிரமாண்டமாக விழுந்து
வெடிக்கும் பீரங்கி அதிர்வுகள்
எவரும் தூங்காத இரவின்..
முடிவின் போதும் முழங்கிய
வேட்டுகள்...

இராணுவம் முன்னேறியதை
தெறித்து விழும் நெருங்கிய சத்தங்கள்
மறைமுகமாக அறிவித்தன..
இனி பதுங்குகுழிகள் பயனற்றவையாகின..
ஒளிந்து கொள்வதற்கு இடங்கள் இல்லை.

பிடித்துவிட்டால் சிறைகளுக்குள்ளும்
சித்திரவதைகளுக்கும்
அகப்பட்டுச் சீரழிந்துபோய் விடுவோம்
உயிர்வரை சென்று
உள்ளம் அழுதது...

சற்று நேரத்திற்கெல்லாம்
அறிவிப்புகள் ...
'உடனே... அனைவரும் வெளியேற வேண்டும்'
கட்டுபாட்டுடன் இணைந்த கட்டளை
திகிலுடன் கூடிய வெறுப்பையும்
சேர்த்துக் கொணர்ந்தது.

காயங்களைக் கிளறிக் கிளறி
எரிகிற உள்ளங்களில் வலியை மூட்ட
முழுவதுமாக எதையோ
அழித்துவிட்டதான உணர்வுகள்.

எத்தனை பொறுப்பற்ற அறிவிப்பு
போராளிகள் மக்களென்றும்
மக்கள் போராளிகள் என்றும்
எதிரியைச் சிந்திக்க வைத்துவிட்டு
ஒரேநாளில் மாற்றிக்கொண்டு
மறைத்துவிட முடியுமா?

போரின் கொடுமை
வறுமையின் அழுகை
சோற்றுக்கான ஏக்கம்
போராளிகளின் நிர்வாகத்துக்குள்
இழுத்துக் கொண்டது...
ஆரம்பப்படிப்புகளோடு சிறு
வருமானத்திற்கான வழியை
அவர்களின் நிர்வாகம்...
ஏழைகளுக்காக
அமைத்துக் கொடுத்தது.

வென்றுவிடுவோம் என்னும்
நம்பிக்கையும்... உறுதியும்...
ஏழைகள் பலரை அதற்குள்
உள்ளீர்த்துக் கொண்டது.......

வருமானத்திற்கான
தொழிலை நிர்வாகத்திற்குள்
இணைத்து தருவித்துத் தந்த
போராட்டங்கள் பற்றிப்
பெருமைப்பட்ட காலம்
ஒரு நாளில் முழுவதும் வெறுத்துப்
போயிற்று.

எங்களையும் போராளிகளாகச்
சிந்திக்க வைத்து...
இப்போது போராட முடியாது
ஒளிந்து கொள்ள வேண்டிய
நிலை வந்ததென....
எல்லாவற்றையும் வேகவேகமாக
இடம்மாற்றிக் கொள்கிறார்கள்!
அடிமையாகிய நாம் என்ன செய்வது?

காலம் முழுவதும் சிறுகச் சிறுக
சேர்த்து வைத்தவற்றை
மணிநேரத்தில் மூடையாகக் கட்டி
எங்கு கொண்டு போவது?
எதிர்காலத்துக்காக எந்த
வளங்களையும் சீர்படுத்தாத,
பெண்குழந்தைகளின் அடிப்படைப்
பிரச்சினைகளை
விளங்கிக்கொள்ளாத
விதண்டாவாதம் பேசும் தந்தை...
எப்போதும் தூசண வார்த்தைகளால்
அம்மாவின் மீதும் பிள்ளைகள் மீதும்
வெறுப்பை உமிழ்ந்து கொண்டு
பணத்தின்மீது பாசம் செலுத்தும்
கொடுமைக்கார அப்பாவை
வெறுத்து...பசிக்காகப் பணம் தேட
படிக்கிற காலத்தில்
இந்த நிர்வாகத்திற்குள் புகுந்தாயிற்று.

எங்கள் முகங்கள்
எதிரிக்குத் தெரியும்படி
போராட்டங்களை ஊக்கப்படுத்தி
பேசும் ஊடகங்களோடு ஒன்றாகி
எதிரியை விமர்சிப்பவர்களாகி..
நம்பிக்கை வைத்தாயிற்று.

இப்போது..மிக இலகுவாக
'எல்லோரும் வெளியேறுங்கள்'
என்பது எத்தனை கொடிய வார்த்தை..
'நாங்கள் வன்னி நோக்கிப்
போகிறோம்..
போராட்டம் வேறு வடிவம் பெறும்'
என சாதாரணமாக
அத்தனை ஈக்களையும்
கைவிட்டுப்போன அந்த நொடி
முழுமையாக ஒடிந்து போனேன்!

நாங்கள் போராளிகள் அல்ல
துப்பாக்கி தூக்கியவர்களுமில்லை...
நிர்வாகத்தில் பணியாற்றியவர்கள்..
எங்கள் தலைகளைக் கொய்து விடும்
வேகம் எதிரிக்கு!

'இருப்பிடத்தைவிட்டு முக்கியமானதை
எடுத்துக் கொண்டு ஓடுங்கள்'
என்பது சாதாரணமான வார்த்தைகளா?
எவ்வளவு... அலட்சியமாக
சொல்லிவிட்டார்கள்.

ஒற்றை வாகனம் கூட இல்லாத
ஏழைகள்..
படிப்புகளையும் பாசங்களையும்
மட்டுமே சொத்துகளாகச்
சேர்த்து வைத்திருந்த நாம்
எதை முதன்மைப்படுத்தி
எதை விட்டுவிட்டுப் போவது..?

பொறுப்பற்று வாழும்
முடமான தந்தை...
குண்டுபட்ட காயங்களோடு
எமக்காக உயிர்காக்காகும்
தாய்.. அவளுக்கு உயிர்கொடுத்த
பாட்டியும் பூட்டனும்..
எதிர்காலத்தின் விளிம்பில்
நின்று கொண்டு வாலிபப் பருவத்தின்
வசதியின்றி வறுமையை மட்டும்
தூக்கிக் கொண்டு நிற்கும்
உடன்பிறப்புகள்..
போராட்டத்திற்குப் பணியாற்றி
என் எதிர்காலம் இருளாகி
என்னோடு சேர்ந்த இவர்கள்
வாழ்வும் பரிதவிக்கிறதே....

பாசமாக கால்களைச் சுற்றும்
நாய்க்குட்டிகள்..
பால் கறக்கும் பசு மாடு...
குலை தள்ளி நிற்கும் தென்னங்கன்றுகள்...
எல்லாம்விட்டு..
யாரையும் தெரியாமல் எங்கு செல்வது?


நாட்கூலிக்கு உழைக்கும் பணம்
படிப்புச் சொல்லி கிடைக்கும்
பணம்..
கடனோடு வாழும்
கசப்பான வாழ்வை
புதியதோர் இடத்திற்கு
எப்படி நகர்த்துவது?..

ஏழைகள் எம்மை ஏற்றுக்கொள்ள
யாருமில்லை!
அடுத்த வேளை பசித்தால்..
இந்தப் பத்துப் பேருக்கும் யார்?
படியளப்பது?

மனிதன் என்பவன்
ஒரு அற்புதப் பிறப்பு என்பதை
யாரும் உணர்ந்து கொள்ளவில்லை
மிருகங்கள் போல...
உணர்வுகள் அற்ற ஜடங்களாக
பிணங்கள் காவும் பித்தர்களாக..
அடிமைகளாக.. கட்டளைக்கு
பணியாற்றும் சீடர்களாக
எத்தர்களாக பணியாற்ற வைத்து
எட்டி உதைக்கும்
மனிதநேயமற்ற கூட்டங்களில்
வலிந்து மாட்டிக் கொண்டோம்.

போர் ஒன்றைத் திணித்து
ஏழைகளை ஏழைகளாகவேனும்
சாகவிடாமல்
பிச்சைக்காரர்களாக
உருமாற்றிய போராட்டம்....
நிம்மதியாக வாழவும் முடியாமல்
அமைதியாக சாகவும் இயலாமல்
வெறும் வயிற்றோடு
எம்மை அணு அணுவாக
சித்திரவதை செய்த...
போராளிகளையும், இராணுவத்தையும்
வெறுத்துத் திட்டி...
எடுக்கக் கூடியதை மட்டும்
எடுத்துக் கொண்டு
நடக்கத் தொடங்குகின்றோம்.

அப்போது மாலை ஆறு மணி
நாளை எங்கிருப்போம் ?
உயிருடன் இருப்போமோ..?
கால்கள் நகர்கின்றன
வெறுப்புகளைச் சுமந்தபடி.....
இந்த நாள் என்னைப்போன்ற பலரின்
அழகிய வாழ்வுகளை மாற்றி..
சிதைத்து...அடையாளம் தெரியாமல்
அழித்துபோனது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







கபில்ராஜ் கஜலக்ஷன்
தரம் - 9B
யா/ நெல்லியடி
மத்திய கல்லூரி.




கோ.பிரணவன்
தரம் 03
சைவ வித்தியா விருத்திச்
சங்கம், திருநெல்வேலி



யோ.நிவிஷன்
தரம் - 3D
யா/ புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்



ப.ருஷயன்
தரம்- 9A
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி



பி. சஞ்ஜேய்
தரம். 6
யா/கொக்குவில்
இந்து கல்லூரி



## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# பொது அறிவு

பாம்பு எதன் மூலம் வாசனையை உணர்கிறது?

நாக்கு

உலகில் மிக நீண்டநாள் வாழும் மிருகம்?

முதலை

காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது?
சீனா உலக வரலாற்றில் பழமையான மரமாக கருதப்படுவது?

பேரீச்சை மரம்

தன்னுடைய எடையைப் போல் இருபது மடங்கு எடையைத் தூக்கும் ஆற்றல் மிக்க உயிரினம்?

எறும்பு

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்?

நான்கு

அணுகுண்டைக் கண்டுபிடித்தவர்?
ராபர்ட் ஓபன் ஹெய்மர்

## சோளக்காட்டு பொம்மை


சோளக்காட்டு பொம்மை பாரு
ஜோராய் நிற்கும் அழகைப் பாரு
வாட்ட சாட்டமாய் நின்று
தோட்டம் காக்கும் தோரணை பார்!

கதிர்களைத் தின்ன திரண்டு வரும்
காக்கை குருவி கூட்டத்தின்
பார்வையில் இது பட்டதுமே
பதறியடித்து ஓடிவிடும்!


வெயிலைக் கண்டு ஓடாது!
மழையைக் கண்டு ஒதுங்காது!
மின்னல் கண்டு மிரளாது!
கொண்ட கடமையில் தவறாது!
கூலி உயர்வு கேட்காது!
கோஷம் எதையும் போடாது
வேலை நிறுத்தம் செய்யாது!
வீதியில் ஊர்வலம் போகாது!

கால நேரம் பார்க்காது!
கண்ணைச் சிறிதும் இமைக்காது!
காவல் காக்கும் இவர் போல
கடமை வீரர் வேறு உண்டோ?





## வழிகாட்டுவோம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org